Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ் : 70 சுபகிருது வருடம், புரட்டாசி மாதம் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை

(27.09.2022) ஹிஜ்ரி 1444, ஸஃபர் - 30 0115886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50

## 50 கிலோ கிராம் கோதுமை மா 21,000 ரூபா

உள்ளூர் சந்தையில் 50 கிலோகிராம் கோதுமை மா மூடையொன்றின் விலை 21 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளதாக அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

02 பக்கம்

## ஏழு நாள் சிசுவை விற்க முயற்சி

**அநுராதபுரத்தில் இருவர் கைது**

(மொஹமட் பிர்தௌஸ்)

பிறந்து ஏழு நாள் சிசுவை 50 ஆயிரம் ரூபாவுக்கு பெற்றுக்கொண்ட பெண்ணொருவரும் இடைத்தரகராக செயற்பட்ட நபர் ஒருவரும் சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக அநுராதபுரம் பொலிஸின் சிறுவர்...

02 பக்கம்

### அதியுயர் பாதுகாப்பு வலயங்கள்;

## வர்த்தமானிக்கு எதிராக நீதிமன்றில் மனுத்தாக்கல்

கொழும்பு மாவட்டத்தில் அதியுயர் பாதுகாப்பு வலயங்களை பிரகடனப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை சவாலுக்குட்படுத்தி, உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று நேற்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சோஷலிச வாலிபர் சங்கத்தின் செயற்பாட்டாளர் ஒருவரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொழும்பு மாவட்டத்தின் பல பகுதிகளை அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தி கடந்த வெள்ளிக்கிழமை வர்த்தமானியை வெளியிட்டிருந்தார்.

இந்த நடைமுறைக்கு பல்வேறு தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகள், பொது அமைப்புகள் கண்டனம் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

02 பக்கம்

## யாழில் திலீபனுக்கு அஞ்சலி செலுத்தும் சிறுமி



03 பக்கம்

## சிறுநீரக பரிசோதனைக்கு நடமாடும் பஸ்சேவை

**சீனா நன்கொடை**

02 பக்கம்

## பதில் அமைச்சர்கள் நியமனம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜப்பான் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்துள்ள நிலையில், அவர் வெளிநாட்டில் இருக்கும் நாட்களில் பணியாற்றுவதற்காக, தனக்குக் கீழ் உள்ள அமைச்சுகளுக்கு பதில் அமைச்சர்களை நியமித்துள்ளார். குறித்த அமைச்சுகளின் இராஜாங்க அமைச்சர்களே இவ்வாறு பதில் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, பதில் பாதுகாப்பு அமைச்சராக இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன், நிதி பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை...

02 பக்கம்

# போராட்டங்களை அடக்குவோம்!

**பாதுகாப்புச் செயலாளர் கமல் கடும் எச்சரிக்கை**

(யோ.தர்மராஜ்)

நாடு சாதாரண நிலைமைக்கு திரும்பும் தருணத்தில் அதற்கு இடமளிக்காது, போராட்டங்கள் மற்றும் பேரணிகளை முன்னெடுத்து, மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தினால் பொலிஸ் மற்றும் இராணுவத்தைக்கொண்டு அதனைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென பாதுகாப்புச் செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்ன எச்சரிக்கை விடுத்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டை கடந்த காலத்தில் நெருக்கடியிலிருந்து சாதாரண நிலைமைக்குக் கொண்டுவருவதற்கு அரசாங்கத்தினால் முடிந்துள்ளது. இதில், பாதுகாப்பு அமைச்சுக்கும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்கும் பாரிய பொறுப்புகள் உள்ளன. அந்த பொறுப்புகளுக்கு அமைய நாங்களும் செயற்படுவோம்.

நாடு சாதாரண நிலைமைக்கு திரும்பும் தருணத்தில் அதற்கு இடமளிக்காது, போராட்டங்கள் மற்றும் பேரணிகளை முன்னெடுத்து மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தினால் அதனை முடக்குவதற்கு பொலிஸார் முழுமையாக செயற்படுவார்கள். இதன்போது, பொலிஸாருக்கு தேவையேற்பட்டால் இராணுவம் முழு ஒத்துழைப்பையும் வழங்கும்.

மக்கள் போராட்டங்களை நடத்தலாம், கூட்டங்களை நடத்தலாம். அதில் எவ்வித பிரச்சினையுமில்லை. ஆனால், அதற்கு முன்னர்...



02 பக்கம்

## பாதிப்புகள் இல்லாத போராட்டங்களே தேவை

**பதில் பாதுகாப்பு அமைச்சர் பிரமித்த கோரிக்கை**

(யோ.தர்மராஜ்)

நாட்டில் போராட்டங்கள் மற்றும் பேரணிகளை நடத்துவதாயின் நாட்டின் சட்டத்துக்கு அமைய சில மணித்தியாலங்களுக்கு முன்னர் பாதுகாப்புத் தரப்பினரிடம் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதன்படி, ஆறு மணித்தியாலங்களுக்கு முன்னர் பொலிஸாருக்கு அறிவித்து, உரிய அனுமதியை பெற்றுக்கொண்டு, முன்னெடுக்கப்படும் எந்தவொரு போராட்டம் அல்லது பேரணிகளுக்கும் எவ்வித பிரச்சினையுமில்லையென பதில் பாதுகாப்பு அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து...

02 பக்கம்

### ஈஸ்டர் தினத் தாக்குதல்கள்;

## பிரதிவாதிகள் பட்டியலிலிருந்து ரணிலை நீக்கியது நீதிமன்றம்

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுக்களின் பிரதிவாதிகள் பட்டியலிலிருந்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பெயரை நீக்குவதற்கு உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதிக்குரிய சிறப்புரிமையின் அடிப்படையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதில்லையென உயர் நீதிமன்றம் நேற்று அறிவித்துள்ளது.

2019 ஏப்ரல் 21ஆம் திகதி நாட்டின் முக்கிய தேவாலயங்கள் மற்றும் உயர்தர விருந்தினர் விடுதிகளை...

02 பக்கம்

## கோட்டாவின் பாரியாரிடம் பணம் கோரி அச்சுறுத்தல்

**ரூ. 10 இலட்சம் கேட்டவர் சி.ஐ.டியினரால் கைது**

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பாரியாரான அயோமா ராஜபக்ஷவிடம் கப்பம் கோரிய குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொலன்னாவ – சாலமுல்ல பிரதேசத்தைச்...

02 பக்கம்



## குற்றச்சாட்டுகளுக்கு சட்டரீதியாக பதில்

**மசகு எண்ணெய் விவகாரம் குறித்து அமைச்சர் காஞ்சன தகவல்**

நாட்டுக்குஇறக்குமதி செய்யப்பட்ட மசகு எண்ணெயின் தரம் தொடர்பில் எழுந்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் சட்ட ரீதியாக பதிலளிக்குமென மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர நேற்று தெரிவித்தார்.

பொதுப்பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவின் குற்றச்சாட்டுகளுக்கு சட்ட ரீதியான...

02 பக்கம்

## யாழ். பல்கலையில் திலீபனுக்கு அஞ்சலி



02 பக்கம்



**உஷ**

**அரசுக்கு ஆதரவளித்து அமைச்சரவையில் இடம்பெறத் தயார். ஆனால், தாம் சொல்லும் நபருக்கு அமைச்சரவையில் இடமளிக்கக் கூடாதென முஸ்லிம் அரசியல் பிரமுகரொருவர் ஜனாதிபதிக்கு தகவல் அனுப்பியுள்ளார். அதனை ஜனாதிபதியும் சாதகமாக பரிசீலிப்பதாக சொல்லப்படுகிறது. அத்துடன் சில நாடுகளுக்கான தூதுவர் பதவிகளும், அரச சபைகளுக்கான உயர் பதவிகளும் மேற்படி அரசியல் பிரமுகரின் கோரிக்கைக்கிணங்க வழங்கப்படவுள்ளனவாம்.**

## போராட்டத்துக்கான இடத்தை மாற்றுவதற்கு ஆலோசனை

**பாதுகாப்புச் சபையில் தீர்மானிக்கப்படுமென கமல் குணரத்ன அறிவிப்பு**

(யோ.தர்மராஜ்)

ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் போராட்டத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடமானது போராட்டத்தை முன்னெடுப்பதற்கான இடமல்ல. இப்பகுதியை தொடர்ந்தும் போராட்டத்துக்கான இடமாக முன்னெடுத்துச் செல்வதா, இல்லையா என்பதை பாதுகாப்புச் சபையில் கலந்துரையாடிய பின் தீர்மானிக்கப்படுமென பாதுகாப்புச் செயலாளர் ஓய்வுபெற்ற மேஜர்...

02 பக்கம்

### அரச சொத்துகள் துஷ்பிரயோகம்;

## எம்.பிக்கள் இருவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை


ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் அரச சொத்துகளை சட்டவிரோதமாக பயன்படுத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க ஜனாதிபதி செயலகம் ஆலோசித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரமுனவின் அநுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கே.பி.எஸ் குமாரசிறி மற்றும் களுத்துறை மாவட்ட...

02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..

**போராட்டத்திற்கு பயந்து ஜனாதிபதியையே பின்வாசலில ஓடவிட்ட ஆக்கள் இப்ப போராட்டத்த பத்தி பாடம் எடுக்கிறாங்கள்...**



# ஈஸ்டர் தின தாக்குதல் தொடர்பில் கைதான சஹ்ரானின் சாரதி உட்பட நால்வருக்குப் பிணை

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு வவுணதீவில் பொலிஸார் இருவர் சுட்டுகொலை செய்யப்பட்ட சம்பவம் மற்றும் உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பாக சந்தேகத்தில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட சஹ்ரானின் சாரதி உட்பட 4 பேர் நேற்று (26) தலா ஒருவருக்கு 35 ஆயிரம் ரூபா பணம் மற்றும் 10 இலட்சம் ரூபா இருவர் கொண்ட சரீரப் பிணையிலும் கடவுச்சீட்டை நீதிமன்றில் ஒப்படைக்குமாறும் நிபந்தனையுடன் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 2018-11-29 ஆம் திகதி வவுணதீவு வலையிறவு பொலிஸ் சோதனைச்சாவடியில் இரு பொலிஸார் துப்பாக்கியால் சுடப்பட்டும் கத்தியால் குத்தப்பட்டும் கொலைசெய்யப்பட்ட சம்பவம் மற்றும் 2019 ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தின குண்டு தாக்குதல் சம்பவம் தொடர்பாக 2019 ஏப்ரல் 29ஆம் திகதி சஹ்ரானின் கார் சாரதியான கபூர் மாமா என்றழைக்கப்படும் சஹீர் ஆதம்லெப்பை, அப்துல் மனாப் மொஹொமட் பீர்தௌஸ், ஹம்சா மொஹொதீன் மொஹொமது இம்ரான், ஹய்யாது மொஹொமட் மில்ஹான் ஆகிய நான்கு பேரையும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்தனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவர்களுக்கு எதிராக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் (சி.ஐ.டி.) மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ததையடுத்து இவர்கள் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்நிலையில், நேற்று (26) மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி என்.எம்.அப்துல்லா முன்னிலையில், வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சிறைச்சாலையில் இருந்து பாதுகாப்பாக அழைத்துவரப்பட்டு, இவர்கள் சார்பில் ஆஜராகிய சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.எம்.முகமட் அமீன் இவர்களை பிணையில் விடுவிக்குமாறு மன்றில் கோரிய நிலையில், இவர்களை தலா ஒருவருக்கு 35 ஆயிரம் ரூபா பிணையிலும், தலா 10 இலட்சம் ரூபா இருவர் கொண்ட சரீரப் பிணையிலும் கடவுச்சீட்டை நீதிமன்றில் ஒப்படைக்குமாறும் அடுத்த வழக்கு எதிர்வரும் ஜனவரி 12ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறும் உத்தரவிட்டு பிணையில் விடுவித்தார்.

# வங்கியில் வைப்பிலிடச் சென்றபோது இரண்டு கோடி ரூபாவைக் கொள்ளையிட முயற்சி

## பொலிஸ் அதிகாரியினால் தம்புத்தேகமவில் முறியடிப்பு

தனியார் வங்கியொன்றில் வைப்பிலிடுவதற்காக எடுத்துச் செல்லப்பட்ட பணத்தை கொள்ளையடித்துச் செல்லும் முயற்சி, பொலிஸ் அதிகாரியொருவரால் முறியடிக்கப்பட்ட சம்பவமொன்று தம்புத்தேகம பிரதேசத்தில் நேற்று (26) பதிவாகியுள்ளது.

தம்புத்தேகம பொருளாதார மத்திய நிலைய வியாபாரியொருவர் இரண்டு கோடியே 23 இலட்சம் ரூபா பணத்தை தனியார் வங்கியொன்றில் வைப்பிலிடுவதற்காக எடுத்துச்சென்றுக் கொண்டிருந்தபோது இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த வர்த்தகரின் பணத்தை கொள்ளையடிப்பதற்கு, திட்டமிட்டு முகக்கவசம் அணிந்த வந்த இருவர் முயற்சித்துள்ளனர். அதன்போது, குறித்த வர்த்தகரிடம் இருந்த பணப்பை இரண்டை எடுத்துக்கொண்டு குறித்த கொள்ளையர்கள் இருவரும் தப்பித்துச் செல்ல முயற்சித்தபோது, அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரியொருவர் இந்த சம்பவத்தை அவதானித்துள்ளார்.

தம்புத்தேகம பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் டீ.ஏ.சி. புத்திக்க குமார உடனடியாக செயற்பட்டு சந்தேகநபர்கள் இருவரையும் குறுக்கிட்டு அவர்களுக்கு முன்னால் ஓடிச்சென்றுள்ளார்.

எவ்வாறாயினும், உயிரை பணையம் வைத்தாவது சந்தேகநபர்களை கைதுசெய்யும் நோக்கில் செயற்பட்டுள்ளார். சந்தேகநபர்கள் அவர்களிடமிருந்த துப்பாக்கியை செயற்படுத்த முயற்சித்திருந்தாலும் அது செயற்பட்டிருக்கவில்லை என புத்திக்க குமார தெரிவித்துள்ளார்.

குறித்த பொலிஸ் அதிகாரியின் முயற்சியை அடுத்து அங்கிருந்த சிலரின் உதவியுடன் கொள்ளையர்கள் இருவரையும் கைதுசெய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

### பதில் அமைச்சர்கள்...

பதில் அமைச்சராக இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, முதலீட்டு ஊக்குவிப்பு பதில் அமைச்சராக இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, தொழில்நுட்ப பதில் அமைச்சராக இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத், பெண்கள் சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் பதில் அமைச்சராக இராஜாங்க அமைச்சர் அனுபா பெஸ்குவல் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

### அதியுயர்...

இதேவேளை, நாட்டில் அதியுயர் பாதுகாப்பு வலையங்களை பிரகடனப்படுத்துவதற்கு அரசின் இரகசிய சட்டத்தை பயன்படுத்த முடியாது என இலங்கை மனித உரிமை ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

அரச இரகசிய சட்டத்தை பயன்படுத்தி அதியுயர் வலையங்களை பிரகடனப்படுத்தும் அரசாங்கத்தின் அணுகுமுறை நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளை முற்றிலும் மீறும் செயலாகும் என மனித உரிமைகள் ஆணைக்குழு தலைவர் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

2298/53 என்ற வர்த்தமானியை மீளப் பெறுமாறும் மனித உரிமை ஆணைக்குழு அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

### சிறுநீரக...

நீண்டகால சிறுநீரக நோயாளர்களை பரிசோதிப்பதற்காக நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய விஞ்ஞான நிலையத்துடன் கூடிய எட்டு பஸ்களை இலங்கைக்கு சீனா வழங்கியுள்ளது.

660 மில்லியன் ரூபா பெறுமதியான இந்தப் பஸ்கள் இலங்கையில் உள்ள எட்டு மாவட்டங்களுக்கு வழங்கப்பட உள்ளன.

அதன்படி, அநுராதபுரம், பொலன்னறுவை, வவுனியா, திருகோணமலை, அம்பாறை, குருநாகல், மாத்தளை மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களுக்கு இந்த பஸ்கள் வழங்கப்படவுள்ளன.






### கோட்டாவின்...

சேர்ந்த 37 வயதான முடி திருத்தும் நபர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷவின் பிரத்தியேக செயலாளர் சுகீஸ்வர பண்டாரவினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கமைய, குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர்,முன்னாள் முதற் பெண்மணி அயோமா ராஜபக்ஷவுக்கு தொடர்ச்சியாக தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு, அவரிடம் 10 இலட்சம் ரூபாவை கப்பமாக கோரியுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலி முகத்திடலில் இடம்பெற்ற அரசாங்க எதிர்ப்புப் போராட்டத்தில் அவர் ஈடுபட்டிருந்ததாக ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

தான் கோரியபடி 10 இலட்சம் ரூபாவை தர மறுத்தால் காலி முகத்திடல் போராட்டம் ஆக்ரோஷமாக மாற்றம் பெறும் எனவும் சுனாமி போன்ற சக்திவாய்ந்த மக்கள் அலை மிரிஹானவில் உள்ள கோட்டாபய ராஜபக்ஷவின் இல்லத்துக்கு அருகில் தோற்றம் பெறும் எனவும் அச்சுறுத்தியுள்ளார்.

கோட்டாய ராஜபக்ஷவின் மனைவிக்கு முதல் நாளன்று 19 அழைப்புகளும் இரண்டாம் நாளன்று 08 அழைப்புகளும் மூன்றாம் நாளில் 03 அழைப்புகளும் சந்தேக நபரிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ளன.

### குற்றச்சாட்டுகளுக்கு...

நடவடிக்கைகளுக்கு தயாராகியுள்ளாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை அதிகாரிகளால் தரமற்ற கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுள்ள காரணத்தினால் மின்வெட்டு நேரத்தை அதிகரிக்கும் நிலை ஏற்பட்டதாக ஜனக ரத்நாயக்க குற்றம் சுமத்தியிருந்தார். இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட கச்சா எண்ணெயில் அளவுக்கு அதிகமான நெப்தா திரவம் அடங்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அதனைக் கொண்டு மின் உற்பத்தி நிலையங்களில் மின்சாரம் தயாரிக்க முடியாதெனவும் அவர் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் தனது ட்விட்டர் தளத்தில் பதிவிட்டிருந்த அமைச்சர் காஞ்சன, இந்த விடயத்தில் சட்டரீதியாக பதிலளிக்கப்படும் என்றார்.

### போராட்டத்துக்கான...

ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (26) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பில் தவறான இடத்திலேயே போராட்டம் செய்வதற்கான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை தற்போது அனைவரும் உணர்ந்துகொண்டுள்ளோம். போராட்டத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் தற்போது பாதுகாப்பு அமைச்சு இல்லை என்றாலும், குறித்த இடத்தை போராட்டத்துக்கான இடமாக ஒதுக்கும் போது, அவ்விடத்திலேயே பாதுகாப்பு அமைச்சு இருந்தது.

ஜனாதிபதி செயலகத்திற்கு அருகிலுள்ள பாதைக்கு மறுபுறத்திலேயே இந்த போராட்டத்துக்கான இடமுள்ளது. இப்பகுதியிலேயே அதிகமான சுற்றுலாப்பயணிகள், வெளிநாட்டு அதிகாரிகள் குழு போன்றோர் தங்குவதற்கான இடங்களும் இருக்கின்றன.

இதேவேளை, போராட்ட இடத்திற்கு போராட்டத்தை முன்னெடுக்க வருவோர் அவ்விடத்தில் இருக்காது ஜனாதிபதி செயலகத்தின் நுழைவாயில் பகுதிக்கு வருகை தருவதால், ஜனாதிபதி செயலகத்தின் செயற்பாடுகளைக் கூட நிறைவேற்றிக்கொள்ள முடியவில்லை. இதனால், இப்பகுதியும் அதியுயர் பகுதிக்குள் உள்வாங்கப்பட்டுள்ளது.

ஆனால், கடற்கரைக்கு வருகை தரும் பொது மக்கள் இவ்விடத்தில் இருப்பதற்கோ அல்லது இளைப்பாறுவற்கோ எவ்வித பாதிப்பும் இல்லை. எனினும், இப்பகுதியை தொடர்ந்தும் போராட்டத்துக்கான இடமாக முன்னெடுத்துச் செல்வதா, இல்லையா என்பதை பாதுகாப்பு சபையில் கலந்துரையாடிய பின் முடிவெடுக்கப்படும்.

ஆனால், போராட்டத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடமானது போராட்டத்தை முன்னெடுப்பதற்கான பொருத்தமான இடமல்ல என்பது என்னுடைய தனிப்பட்ட கருத்தாகும். இப்பகுதி அதியுயர் பகுதியாக இருப்பதால் போராட்டங்களையும் முன்னெடுக்க முடியாது – என்றார்.

### அரச சொத்துகள்...

நாடாளுமன்ற உறுப்பினர் லலித் எல்லாவெல ஆகியோருக்கு எதிராகவே சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜனாதிபதி செயலகம் ஆலோசித்து வருகின்றது.

இதற்கமைய அநுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பயன்படுத்திய Toyota Land Cruiser வாகனமும் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பயன்படுத்திய Toyota Hilux வாகனமும் கையகப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பயன்படுத்திய அரச வாகனங்கள் மீளக் கையளிக்கப்பட்டுள்ள நிலையில், குறித்த இருவரும் தொடர்ச்சியாக பயன்படுத்தி வந்தமையினால், வாகனங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

எனினும், அரச சொத்துகளை முறைகேடாக பயன்படுத்தியதாக தெரிவித்து குறித்த இரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள ஜனாதிபதி செயலகம் அவதானம் செலுத்தி வருகின்றது.

### 50 கிலோ கிராம்...

தற்போது நிலவும் சூழ்நிலை காரணமாக கிராமப்புறங்களில் உள்ள பல வெதுப்பகங்கள் மூடப்பட்டுள்ளதாக அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தாம் கோரியுள்ள கோதுமை மா கிடைக்கப்பெற்றதன் பின்னர் கோதுமை மாவின் விலை குறைக்கப்படும் என வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

### ஈஸ்டர் தின...

இலக்குவைத்து பயங்கரவாத தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதில் 250 க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டதுடன், மேலும் பலர் படுகாய மடைந்தனர்.

இந்த சம்பவம் இடம்பெற்ற வேளையில், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது.

### பாதிப்புகள் இல்லாத...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் குழப்பகரமான சூழ்நிலையை ஏற்படுத்தும், மக்கள் அன்றாட வாழ்க்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் போராட்டங்கள், பேரணிகள் மற்றும் ஆர்ப்பாட்டங்களை சட்டத்துக்கு அமையவே பாதுகாப்புத் தரப்பினர் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர். இனியும் அவ்வாறே நடவடிக்கை எடுப்பார்கள்.

போராட்டங்கள் மற்றும் பேரணிகள் நடத்துவதற்கு பொது மக்களுக்குள்ள உரிமையை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. அவற்றுக்கு மதிப்பளிக்கின்றது. ஆனால், முன்னெடுக்கப்படும் ஏதேனும் போராட்டங்கள், பேரணிகள் என்பன மக்களின் வாழ்வாதாரத்துக்கு மற்றும் பொருளாதாரத்துக்கு பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடாது.

போராட்டங்கள் மற்றும் பேரணிகளை நடத்துவதாயின் நாட்டின் சட்டத்துக்கு அமைய சில மணித்தியாலத்துக்கு முன்னர் பாதுகாப்புத்தரப்பினரிடம் அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும். ஆனால், தற்போது இடம்பெறும் எந்தவொரு போராட்டமும் சட்டத்துக்கு அமைய முன்னெடுக்கப்படுவதில்லை.

ஆறு மணித்தியாலங்களுக்கு முன்னர் பொலிஸாருக்கு அறிவித்து, உரிய அனுமதியை பெற்றுக்கொண்டு, முன்னெடுக்கப்படும் எந்தவொரு போராட்டம் அல்லது பேரணிகளுக்கும் எவ்வித பிரச்சினையுமில்லை. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மக்களின் அமைதிக்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சட்டங்களை மீறி, மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் மற்றும் பொறுப்பற்ற வகையில் செயற்படுவதற்கு எந்தவொரு தரப்பினருக்கும் இடமளிக்கப்படாது. இது குறித்து அரசாங்கமும் அவதானத்துடன் செயற்படும்.

அவ்வாறில்லையேல், முன்பை போன்று வன்முறைகளையும் அச்சத்தையும் ஏற்படுத்தும் வகையிலான சம்பங்கள் இடம்பெறும். அரச மற்றும் தனியார் சொத்துகளை தேசமாக்குதல், உயிர் ஆபத்துகளை ஏற்படுத்தல் மற்றும் எவ்வித கட்டுப்பாடுகளுமற்ற சம்பவங்களும் இடம்பெறும். இவ்வாறான சம்பவங்கள் ஏற்படுவதற்கும் இனியும் இடமளிக்க முடியாது. எனவே, சில தரப்பினரின் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக முன்னெடுக்கப்படும் அனைத்து முயற்சிகளும் சட்டத்துக்கு அமைய அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படும்.

இதேவேளை, பொறுப்புள்ள அரசாங்கத்திடமிருந்து பொது மக்கள் எதிர்பார்க்கும் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவே ஜனாதிபதியினால் அதியுயர் பாதுகாப்பு பகுதிகள் பெயரிடப்பட்டன. அதியுயர் பகுதிகள் என்பது உலகுக்கும் எங்களுக்கும் புதிதல்ல. எனவே, இவ்வாறு அதியுயர் பாதுகாப்பு பகுதிகளாக பெயரிடப்பட்டுள்ள இடங்களில் எப்போதும் போன்றும் அனைவராலும் நடந்துகொள்ள முடியும். மாறாக, தேவையற்ற செயற்பாடுகளை முன்னெடுப்போருக்கு மாத்திரமே பிரச்சினையாக அமையும்.

இந்த நிலையில், தற்போது அதியுயர் பாதுகாப்பு பகுதிகளாக பெயரிடப்பட்டுள்ள இடங்களை தொடர்ந்து அதியுயர் பகுதிகளாக வைத்திருப்பதா, இல்லையா என்பதை ஜனாதிபதி தீர்மானிப்பார் என்பதை எங்களுக்கு அறிவித்துள்ளார் - என்றார்.

### யாழ்.பல்கலையில்...

(யாழ். செய்தியாளர்)

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாக தீபம் திலீபனின் 35ஆவது நினைவு தினம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று (26) அனுஷ்டிக்கப்பட்டது.

தியாக தீபம் தீலிபன் உயிர்நீத்த 10.48 மணிக்கு நினைவேந்தல் ஆரம்பித்ததுடன், பொதுச் சுடரும் ஏற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, திலீபனின் உருவப்படத்திற்கு பல்கலைக்கழக சமூகத்தினரால் மலர் மாலை அணிவித்து மலர் தூவியும் அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், பலரும் உணர்வு பூர்வமாக கலந்துகொண்டனர்.

இதன்போது பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், கல்விசாரா ஊழியர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் புதிதாக திட்டமிடப்படும் சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும், சிறைகளிலும் முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும், அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும், ஊர்க்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்பட வேண்டும், தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும் என ஐந்து அம்ச கோரிக்கைகளை முன்வைத்து, தியாக தீபம் திலீபன் 15.09.1987 தொடக்கம் 26.09.1987 வரையான 12 நாட்கள் அகிம்சை வழியில் யாழ். நல்லூரில் நீராகாரம் அருந்தாமல் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி சாவைத் தழுவிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

### ஏழு நாள்...

மற்றும் பெண்கள் தொடர்பான பிரிவு தெரிவித்துள்ளது.

கெப்பத்திகொல்லாவ வாஹல்கட பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவரும் இந்தக் கொடுக்கல் வாங்கலின் இடைத்தரகராக செயற்பட்ட அநுராதபுரத்தைச் சேர்ந்த முச்சக்கரவண்டி சாரதி ஆகியோரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த குழந்தையின் தந்தையே சிசுவை விற்பனை செய்துள்ளமை ஆரம்பக்கட்ட விசாரணைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அவர் அந்தப் பிரதேசத்திலிருந்து தலைமறைவாகியுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அநுராதபுரம், மல்வத்து ஒழுங்கை பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதான குறித்த சிசுவின் தாயார் முன்வைத்த முறைப்பாட்டுக்கமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர் சிசுவுடன் இவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

சட்டபூர்வமற்ற உறவினால் பிறந்ததாக தெரிவிக்கப்படும் குறித்த சிசு, அநுராதபுரம் ஆதார வைத்தியசாலையில் பிறந்துள்ளது.

அதன் பின்னர் குழந்தையை அவரின் வீட்டுக்கு அழைத்துச் சென்றுள்ளதுடன், சிசுவின் தந்தை மற்றும் தாய்க்கு இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளமை பொலிஸ் விசாரணைகளில் தகவல்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

சிசுவின் தாயார், அவரின் சிசுவை நபரொருவர் எடுத்துச்செல்லவுள்ளார் என்பதை அடிப்படையாக கொண்டு அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். குறித்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சாட்சிகள் மற்றும் தொலைபேசி இலக்கம் என்பவற்றினூடாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் ஏழு நாட்கள் கொண்ட குறித்த சிசுவை கொண்டுவரச் செய்து சந்தேகநபர்களை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். சிசுவை



விற்பனை செய்வதற்கு தாதியொருவர் மற்றும் மேலுமொரு பெண்ணின் உதவி கிடைத்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

### போராட்டங்களை...

பாதுகாப்பு தரப்பின் அனுமதியை பெற்றுக் கொள்ள வேண்டும்.

கிராமங்களிலுள்ள மத வழிபாட்டுத் தலங்களில் ஒலிபெருக்கிகளை இயக்குவதாயின் அப்பகுதியிலுள்ள பொலிஸ் நிலையத்தில் அனுமதி பெற வேண்டும். யாரும் தங்களுடைய வாழ்வாதாரம் மற்றும் அன்றாட வாழ்க்கை செயற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் செயற்படுவற்கு விரும்பவதில்லை. எனவே, இவை அனைத்தையும் ஆராய்ந்து பார்த்தே பாதுகாப்பு தரப்பினரும் அனுதியை வழங்குவர்.

அவ்வாறில்லாது, எவ்வித அனுமதியுமின்றி உடனடியாக முன்னெடுக்கப்படும் போராட்டங்களை கட்டுப்படுத்துவதற்கு பொலிஸாருக்கு பொறுப்புள்ளது. அதனை நிறைவேற்றுவதற்கும் பொலிஸார் நடவடிக்கை எடுப்பார்கள்.

இதேவேளை, அதியுயர் பகுதிகள் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டதல்ல. காலங்காலமாக வரும் சில சூழ்நிலைகளைக் கட்டுப்படுத்தப் பயன்படும் விடயமாகும். கடந்த காலங்களில் ஜனாதிபதி செயலகம் சுற்றிவளைக்கப்பட்டது. அரசு அதிகாரிகள் அங்கு தங்கள் பணிகளைச் செய்ய வாய்ப்பிருக்கவில்லை. நாட்டின் ஆட்சி குறித்து முடிவு எடுக்க வேண்டிய இடத்திற்கு இவ்வாறான இடையூறுகள் ஏற்பட்டால், அவ்வாறான இடங்களை நாம் பாதுகாக்க வேண்டும். முன்னர் இடம்பெற்ற நிலைமை மீண்டும் ஏற்படக்கூடாது.

வெளிநாடுகளில் இருந்து பிரதிநிதிகள் மற்றும் தூதுவர்களுடன் ஜனாதிபதி மாளிகையிலேயே ஜனாதிபதி கலந்துரையாடினார். ஆனால், அவர்களுக்கு அங்கு வர முடியாவிட்டால், கொழும்புக்கு வரும்போது, குழப்பமான சூழலையை பார்த்தால், நாட்டின் எந்த முன்னேற்றத்துக்கு அவர்களின் ஆதரவை பெறுவதற்கு பெரும் தடையாக இருக்கும். இதன் காரணத்தினாலேயே, கொழும்பின் பெருநகரில் சில இடங்களை மட்டும் உயர் பாதுகாப்பு வலயங்களாக வர்த்தமானி அறிவித்தல் மூலம் அடையாளப்படுத்தியுள்ளோம் - என்றார்.

# வடக்கின் பல பாகங்களில் தியாக தீபம் திலீபனின் 35ஆவது நினைவு தினம் அனுஷ்டிப்பு









(மன்னார் நகர் நிருபர்)

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாக தீபம் திலீபனின் 35ஆவது நினைவு தினம், யாழ்ப்பாணம், நல்லூர் பகுதியில் அமைந்துள்ள அவரது நினைவிடத்தில் நேற்று (26) அனுஷ்டிக்கப்பட்டது.

மன்னாரிலும் நேற்று (26) காலை தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் மன்னாரிலுள்ள அலுவலகத்தில் தியாக தீபம் திலீபனின் 35 ஆவது ஆண்டு நினைவேந்தல் வாரத்தின் இறுதி நாள் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நினைவேந்தல் நிகழ்வில் தியாகதீபம் திலீபனின் உருவப்படத்திற்கு சுடர் ஏற்றி மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வில் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை ஜெயபாலன் குரூஸ் அடிகளார், மதத் தலைவர்கள், மன்னார் நகர சபையின் தலைவர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

## அமைச்சர் விஜயதாச - யுனிசெப் பிரதிநிதிகள் சந்திப்பு



நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டதரணி விஜயதாச ராஜபக்ஷ மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியத்தின் (யுனிசெப்) பிரதிநிதிகள் சிலருக்கும் இடையிலான கலந்துரையாடலொன்று நேற்று (26) அமைச்சில் இடம்பெற்றிருந்தது.

தற்போது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சிறுவர் மற்றும் இளைஞர் கட்டளைச் சட்டம், சிறுவர்களை விடுதிகளில் சேர்ப்பதற்கு பதிலாக அவர்களை குடும்பத்துடனே வைத்துக்கொள்வதற்கான மறுசீரமைப்புகளை செய்தல், சிறுவர் தொடர்பான நீதியை நிலைநாட்ட நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய சகல நிறுவனங்களையும் உள்ளடக்கும் வகையில் நீதி அமைச்சின் தலைமையில் குழு நியமித்தல் மற்றும் பாடசாலை செல்லும் வயதுடைய மாணவர்களின் போசணை நிலைமை போன்ற விடயங்கள் குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சிறுவர்களுக்காக முன்னெடுக்கும் சகல செயற்பாடுகளுக்கும் தமது முழு ஒத்துழைப்பையும் வழங்குவோம் என்று ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதிய பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும், இந்தக் கலந்துரையாடலில் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் இலங்கைக்கான சட்டப் பிரதிநிதி சிஸ்டியன் ஸ்கூக், அந்த நிதியத்தின் பிரதான சிறுவர் பாதுகாவலர் மிரண்டா ஆம்ஸ்ட்ரோங் மற்றும் அமைச்சின் மேலதிக செயலாளர் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.நா. தூதுவர் ரணிலுடன் சந்திப்பு



ரோமில் உள்ள ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய முகவர் நிலையங்களுக்கான அமெரிக்கத் தூதுவர் சின்டி மெக்கெய்ன் நேற்று முன்தினம் (25) இலங்கைக்கு வருகை தந்திருந்தார். மனிதாபிமான தேவைகளை மதிப்பிடுவதற்கும், அமெரிக்க நிதியுதவியுடன் கூடிய உதவிகளை ஆய்வு செய்வதற்கும், அனைத்து இலங்கையர்களுக்கும் உணவுப் பாதுகாப்பைக் கட்டியெழுப்புவதற்கான நீண்டகால உத்திகளுடன் அவர் இங்கு வந்துள்ளார்.

அவரை இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் வரவேற்றிருந்தார். சின்டி மெக்கெய்ன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.





கண்டி, தெல்தோட்டை எனசல்கொல்ல மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்ற புலவர் அருள் வாக்கி அப்துல்காதரின் நினைவு தின வைபவத்தில் ஞானம் இலக்கிய சஞ்சிகை ஆசிரியர் ஞானசேகர ஐயர், தினகரன் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர் மற்றும் இந்தியாவைச் சேர்ந்த கலைஞர் இளம்பிறை எம்.ஏ.ரஹ்மான் உட்பட பலர் கௌரவிக்கப்பட்டனர். நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்நிகழ்வில், இளம்பிறை ரஹ்மான் சார்பாக கண்டி இரா.அ.இராமன் விருதைப் பெற்றுக் கொண்டார்.

(படங்கள்: ஜே.எம்.ஹாபீஸ் மற்றும் கண்டி இராமன்)

## கருத்து கந்தசாமி

ஊர்களில் கலியாணம் முடிஞ்சு பெண்ணும் மாப்பிள்ளையும் வீட்டுக்கு வரும்போதோ அல்லது வீட்டிலிருந்து வெளியே முதற்தடவையா செல்லும்போதோ சாவு வீடோ அல்லது மரண ஊர்வலமோ எதிர்ப்பட்டா நல்லதென்று சொல்லுவார்கள்... அதுக்கு சரியான விஞ்ஞான விளக்கம் எனக்குத் தெரியேல்ல...

ஆனா, ரணில் ஐயா பதவியெடுத்த பின்னர் முதல் வெளிநாட்டுப் பயணம் மகாராணி சாவு வீடு..! இரண்டாவது பயணம் ஜப்பான் பிரதமர் மரணவீட்டு நிகழ்வு..! அடுத்து எங்கேயெண்டு தெரியேல்ல. ஆனா, ஊர் வழக்கப்படி அவர் அப்படிப் போறது நல்லதெண்டு ரணிலின் தீவிர விசிறியான ஒரு தமிழ் ஆள் சொன்னார்..!

எப்படியோ ஜனநாயகம் செத்த வீட்டுக்கு ரணில் போகாமல் இருந்தாச் சரி..!



## 2019 ஹொலிறூட் தோட்ட தீப்பரவல் சம்பவம்!

### பாதிக்கப்பட்ட 200க்கும் மேற்பட்டோர் மூன்று வருட காலமாக நிர்க்கதி



(க.கிஷாந்தன்)

தலவாக்கலை - ஹொலிறூட் கீழ்ப்பிரிவு தோட்டத்திலுள்ள லயக்குடியிருப்பில் 2019 ஆம் ஆண்டு ஏற்பட்ட தீப்பரவல் காரணமாக 24 வீடுகளைக் கொண்ட லயன் குடியிருப்பொன்று முற்றாக எரிந்து தீக்கிரையானது.

இதனால் 24 குடும்பங்களை சேர்ந்த 200 இற்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டு நிர்க்கதியாகினர்.

இதனையடுத்து பாதிக்கப்பட்டவர்கள் தோட்டத்திலுள்ள பொது கலாசார மண்டபத்தில் எவ்வித அடிப்படை வசதிகளுமற்ற நிலையில் தங்க வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் தொடர்ந்தும் மூன்று வருடங்களாக குறித்த கலாசார மண்டபத்தில் பல்வேறு அசௌகரிங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களுக்கான புதிய வீட்டுத் திட்டத்துக்கான அடிக்கல்லானது, 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாட்டப்பட்டு, பணிகளும் ஆரம்பித்து வைக்கப்பட்டன. வீடமைப்புப் பணிகள் துரிதமாக ஆரம்பிக்கப்பட்ட போதிலும் தற்போது அதன் பணிகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

எனினும், பொது கலாசார மண்டபத்தில், சேலைகள், போர்வைகளால் தமது வாழ்விடத்தை மறைத்து, பலர் வாழத் தொடங்கியுள்ளனர். எனவே, உடனடியாக தமது வீடுகளை முழுமைப்படுத்தித் தருமாறு, பாதிக்கப்பட்ட மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.




தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, செப்டெம்பர் 27ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# நீர் வெறுப்பு நோய்ப்பாதிப்புக்கு அரசும் பொறுப்பேற்க வேண்டும்

வாரியபொல கனத்தேவெவ பகுதியைச் சேர்ந்த 2 வயது குழந்தை விசர் நாய்க்கடியால் ( நீர் வெறுப்பு ) பாதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளது.

கடந்த செப்டெம்பர் மாதம் 3ஆம் திகதி விசர் நாய் ஒன்று மேற்படி குழந்தையை கடித்துள்ளதுடன், அவரது வீட்டில் வீட்டு நாயையும் கடித்துள்ளது.

அது விசர் நாயாக இருக்க வேண்டும் என்ற சந்தேகத்தை அடுத்து, தடுப்பூசி போடுவதற்காக குழந்தையின் பெற்றோர் வாரியபொல மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

எவ்வாறாயினும், வாரியபொல வைத்தியசாலையில் விசர் நாய்க்கடிக்கான தடுப்பூசி கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டதையடுத்து, அவரது பெற்றோர் குழந்தையை நிக்கவெரட்டிய வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று செப்டெம்பர் 4, 7 மற்றும் 11 ஆம் திகதிகளில் 3 தடுப்பூசிகளைப் பெற்றுள்ளனர்.

ஒரு தடுப்பூசி செலுத்த வேண்டிய இருந்த நிலையில், குழந்தையின் உடல்நிலை மோசமடைந்து செப்டெம்பர் 21 ஆம் திகதி நிக்கவெரட்டிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டது. விசர் நாய்க்கடியால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்ட நிலையில், குழந்தை கடந்த 23ஆம் திகதி உயிரிழந்தது.

கடந்த ஆறு மாதங்களில் 20 பேருக்கு மேற்பட்டோர் பேர் நீர் வெறுப்பு நோயினால் (விசர் நாய்க்கடி நோயினால்) உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. 95 வீதமான நோய்த்தொற்றுகள் நாய் கடிப்பதனால் ஏற்பட்டுவதாகவும், நாய்க்குட்டிகள் மூலம் குறித்த நோய் பரவி அதிக ஆபத்தை ஏற்படுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆறு மாதங்களில் 5 இலட்ச நாய்களுக்கு இலவசமாக தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. 30 ஆயிரம் தெரு நாய்களுக்கு கருத்தடை செய்து அவற்றின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் 2 முதல் 3 மில்லியன் நாய்கள் உள்ளன. இருப்பினும், ஆண்டுக்கு சுமார் 1.1 மில்லியன் நாய்களுக்கு மட்டுமே தடுப்பூசி போடப்படுவதாக புள்ளிவிபரங்கள் சொல்கின்றன. 70 வீதமான நாய்க்குட்டிகளுக்கு தடுப்பூசி போடப்படுவதன் மூலம் குறித்த நோய் பரவுவதை குறைக்க முடியும்.

நீர் வெறுப்பு நோயினால் வருடாந்தம் 20 தொடக்கம் 30 வரையான மரணங்கள் ஏற்படுவதாகவும் வருடம் தோறும் ஆறு வாரங்களுக்கு மேல் உள்ள அனைத்து நாய்களுக்கும் விசர் நாய்க்கடி தடுப்பூசி போடுமாறு சுகாதார அமைச்சு பரிந்துரைத்துள்ள போதும், அது முறையாக நடக்கின்றதா என்பது கட்டாயம் ஆராயப்படவேண்டும். விசர் நாய்க்கடிக்கு எதிராக நாய்களுக்கு தடுப்பூசி போடாததும் மற்றும் நாய் கடித்த பின்னர் உரிய நேரத்தில் சிகிச்சை பெறாததும் இலங்கையில் இறப்புக்கான முக்கிய காரணங்களாகும்.

விலங்கு கடித்தவுடன் சிகிச்சை அளிக்கப்பட்டால் 100 வீதம் குறித்த நோயில் இருந்து முழுமையாக குணமடைய முடியும். விசர் நாய்க்கடிக்கான (நீர் வெறுப்பு நோய்) தடுப்பூசிகளை அரசாங்க மருத்துவமனைகளில் இலவசமாகப் பெற முடியும் .

1975 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் விசர் நாய்க்கடி தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. 1973 ஆம் ஆண்டு நீர் வெறுப்பு நோய் மூலம் 377 சராசரி இறப்புகள் ஏற்பட்டதாகவும், 2014 ஆம் ஆண்டு அது சராசரியாக 19 ஆக குறைந்ததாகவும் அவர் கூறினார். 2025 ஆம் ஆண்டுக்குள் இலங்கையை நீர் வெறுப்பு நோய் அற்ற நாடாக மாற்ற திட்டமிட்டுள்ளதாகவும், அதற்காக பயனுள்ள பல உத்திகள் மற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் குறிப்பாக செல்லப்பிராணிகளை சொந்தமாக வைத்திருக்காதவர்களிடம் இந்த நோய் குறித்த விழிப்புணர்வு குறைவாக இருப்பதாகவும் அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் எனவும் பொது சுகாதார கால்நடை சேவை தரப்புகள் தெரிவிக்கின்றன.

இலங்கையர்கள் மட்டுமல்ல, கடந்த 2017 ஆம் ஆண்டு சுற்றுலாவுக்காக இலங்கை வந்த பிரான்ஸ் நாட்டு சிறுவன் விசர் நாய்க்கடிக்குள்ளாகி மரணித்தார். திக்குவவெலையில் தெருநாய் ஒன்று அவரின் காலை கடித்து மூளையில் தாக்கம் ஏற்பட்ட நிலையில், அவர் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் சிகிச்சை பலனின்றி இறந்தார்.

நீர் வெறுப்பு நோய் வீட்டில் வளர்க்கப்படும் நாய்களை விட தெருநாய்களால்தான் அதிகபட்சம் ஏற்படுகிறது. தெருவில் கொட்டிக் கிடக்கும் குப்பைகள்தான் தெருநாய்களின் பெருக்கத்துக்கு முக்கியமான காரணம். தெருக்களில் குப்பைகள் இல்லாமல் இருப்பதும், உள்ளூராட்சி அமைப்புகளால் கழிவு மேலாண்மை முறையாக நடத்தப்படுவதும், தெருநாய்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும்.

தெருவோரக் கடைகளின் மாமிசக் கழிவுகளும், தெருவில் கொட்டப்படும் உணவுக் கழிவுகளும் தயவுதாட்சண்யமில்லாமல் தடுக்கப்படாவிட்டால் வெறிநாய் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது. விசர் நாய்க்கடிக்கு உடனடி சிகிச்சையும், வீரியம் குறையாத தடுப்பூசியும் கிடைப்பதை உறுதிப்படுத்துவதும் அவசியம். பொது இடங்களில் தெருநாய்களால் ஏற்படும் பாதிப்புகளுக்கு அரசு பொறுப்பேற்றாக வேண்டும்.



# மனித உணவுச் சங்கிலியில் நுழையும் மிகச்சிறிய பிளாஸ்டிக் துகள்கள்

## ஆய்வில் கண்டுபிடிப்பு

நனோ டுடே இதழில் செப்டெம்பர் 12 ஆம் தேதி வெளியிடப்பட்ட ஆய்வு கண்டுபிடிப்புகளின்படி, உயிரினங்களில் உள்ள நனோ பிளாஸ்டிக்குகளின் அளவைக் கண்டறிந்து அளவிட ஆராய்ச்சியாளர்கள் குழு ஒரு புதிய, உலோக கைரேகை அடிப்படையிலான முறையை உருவாக்கியுள்ளது.

பிளாஸ்டிக் மாசுபாட்டால் சுற்றுச்சூழலுக்கும் ஆரோக்கியத்துக்கும் ஏற்படும் பாதிப்புகள் கவலையை அதிகரித்து வருகின்றன. குறிப்பாக, பிளாஸ்டிக் சிறிய துண்டுகளாக உடைந்து சுற்றுச்சூழலில் குவியத் தொடங்குகிறது. கிழக்கு பின்லாந்து பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள், நனோ பிளாஸ்டிக் எனப்படும் சிறிய பிளாஸ்டிக் துகள்கள் தாவரங்கள், பூச்சிகள் மற்றும் மீன்கள் வழியாக மனித உணவு வலையின் உள்ளே செல்ல முடியும் என்று கண்டறிந்துள்ளனர். நனோ பிளாஸ்டிக் என்பது 1,000 நனோமீற்றருக்கும் குறைவான சிறிய பிளாஸ்டிக் குப்பைத் துகள்கள் (1 நனோ மீற்றர் என்பது ஒரு மீற்றரில் பில்லியனில் ஒரு பங்குக்கு சமம்).

### இந்த ஆய்வு எப்படி நடத்தப்பட்டது?

நனோ டுடே இதழில் செப்டெம்பர் 12 ஆம் திகதி வெளியிடப்பட்ட ஆய்வு கண்டுபிடிப்புகளின்படி, உயிரினங்களில் உள்ள நனோ பிளாஸ்டிக்குகளின் அளவைக் கண்டறிந்து அளவிட ஆராய்ச்சியாளர்கள் குழு ஒரு புதிய, உலோக கைரேகை அடிப்படையிலான முறையை உருவாக்கியது.

அவர்கள் ஆய்வுக்காக, மூன்று கூம்பு வடிவ மாதிரி உணவுச் சங்கிலியில் இந்த நுட்பத்தைப் பயன்படுத்தினார்கள் (உணவுச் சங்கிலியில் ஓர் உயிரினம் ஆக்கிரமித்துள்ள இடம் கூம்பு வடிவம்). இதில் கீரை முதன்மை உற்பத்தியாளர் – கறுப்பு சிப்பாய் ஈ புழுக்கள், முதன்மை நுகர்வோர், பூச்சி உண்ணும் மீன் (ரோச்) இரண்டாம் நுகர்வோர்.

ஆராய்ச்சியாளர்கள் ஆய்விற்காக, சுற்றுச்சூழலில் பொதுவாகக் காணப்படும் பிளாஸ்டிக் கழிவுகளான பொலிஸ்டிரின் (பி.எஸ்.) மற்றும் பொலிவினைல் குளோரைட் (பி.வி.சி.) அவற்றின் நனோ பிளாஸ்டிக் துண்டுகளில் இருந்து நனோ பிளாஸ்டிக் துகள்கள் வரை 14 நாட்களுக்கு அசுத்தமான மண்ணின் மூலம் கீரை செடிகளின் மீது தெளித்தனர். பின்னர், அவை அறுவடை செய்யப்பட்டு கறுப்பு சிப்பாய் ஈ புழுக்களுக்கு உணவளிக்கப்பட்டன. இவை பல நாடுகளில் புரத ஆதாரமாகப் பயன்படுத்தப்படுகின்றன. மேலும், கோழிகள் மற்றும் கால்நடைகளுக்கு தீவனமாகவும் பயன்படுத்தப்படுகின்றன.

ஐந்து நாட்களுக்கு பூச்சிகளுக்கு கீரையை உணவளித்த பிறகு, அந்த பூச்சிகள் ஐந்து நாட்களுக்கு மீன்களுக்கு (ரோச்) உணவாக அளிக்கப்பட்டன.

### உணவுச் சங்கிலியில் பிளாஸ்டிக் துகள்கள் எப்படி செல்கிறது?

ஆராய்ச்சியாளர்கள் ஸ்கேனிங் நுண்ணோக்கியைப் பயன்படுத்தி, துண்டிக்கப்பட்ட தாவரங்கள், பூச்சியின் புழுக்கள் மற்றும் மீன்களை ஆய்வு செய்தனர். மண்ணில் இருந்து நனோ பிளாஸ்டிக்குகள் தாவரங்களின் வேர்கள் மற்றும் இலைகளில் குவித்திருப்பதைக் கண்டறிந்தனர். பின்னர், அசுத்தமான கீரை நனோ பிளாஸ்டிக்கை பூச்சிகளுக்கு மாற்றியது. பிளாக் சிப்பாய் ஃப்ளை செரிமான அமைப்பின் இமேஜிங் பொலிஸ்டிரின் மற்றும் பொலிவினைல் குளோரைட் (பி.வி.சி.) நனோ பிளாஸ்டிக் இரண்டும் வாய் மற்றும் குடலில் இருப்பதைக் காட்டியது. இருப்பினும் 24 மணிநேரத்தில் அவை தங்கள் குடல்களை காலி செய்தன. இருப்பினும், கீரை மற்றும் பூச்சிகள் இரண்டிலும், பி.வி.சி. நனோ பிளாஸ்டிக்குகள் உடன் ஒப்பிடும்போது, குறைந்த அளவு பொலிஸ்டிரின் துகள்கள் உள்ளன.

அசுத்தமான பூச்சிகளை உண்ட மீன்களில், செவுள்கள், கல்லீரல் மற்றும் குடல் திசுக்களில் பிளாஸ்டிக் துகள்கள் கண்டறியப்பட்டன. கல்லீரலில் நனோ பிளாஸ்டிக்கின் அதிகம் செறிவாக உள்ளது. இது முதுகெலும்புகளுக்குள் நுழையும் நனோ பிளாஸ்டிக்களுக்கான முதன்மை இலக்கு திசு என்று ஆய்வு கூறுகிறது.

### நனோ பிளாஸ்டிக்கிற்கு தடைகள் இல்லையா?

அவற்றின் சிறிய அளவு காரணமாக, நனோ பிளாஸ்டிக்குகள் உடலியல் தடைகளை கடந்து உயிரினங்களுக்குள் நுழையலாம். காய்கறிகள் மற்றும் பழங்கள் மூலம் மண்ணில் இருந்து நனோ பிளாஸ்டிக்கை உறிஞ்சுவதை அளவிடுவது, நனோ பிளாஸ்டிக் நமது உணவுச் சங்கிலியிலும், அதன்பிறகு நம் உடலிலும் எந்த அளவிற்கு நுழைய முடியும் என்பதைச் சொல்ல உதவும் என்று ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

“கீரை மண்ணிலிருந்து நானோ பிளாஸ்டிக்கை எடுத்து உணவுச் சங்கிலியில் மாற்றும் என்பதை எங்கள் ஆய்வு முடிவுகள் காட்டுகின்றன” என்று கிழக்கு பின்லாந்து பல்கலைக்கழகத்தின் முன்னணி ஆராய்ச்சியாளர் டொக்டர் ஃபாஸல் மோனிக் கூறினார். “இந்த கண்டுபிடிப்புகள் மற்ற தாவரங்கள், பயிர்கள் மற்றும் வயல் அமைப்புகளுக்கு பொதுவானதாக கண்டறியப்பட்டால், மண்ணில் சிறிய பிளாஸ்டிக் துகள்கள் இருப்பது தாவரவகைகள் மற்றும் மனிதர்களுக்கு சுகாதார அபாயத்துடன் தொடர்புடையதாக இருக்கலாம் என்பதை இது குறிக்கிறது. இருப்பினும், இந்த தலைப்பில் மேலும் ஆராய்ச்சி இன்னும் அவசரமாக தேவைப்படுகிறது” என்று டொக்டர் மோனிக் மேலும் கூறினார்.

***நன்றி: இந்தியன் எக்ஸ்பிரஸ்***

## நக்கல் நமசிவாயம்

**திரிபோஷாவில இரசாயனம் கலந்திருக்குதா, இல்லையா எண்டதை ஈஸியாக் கண்டுபிடிக்க பார்லிமென்ட்டில இருக்கிற 225 பேருக்கும் அதை சாப்பிடக் கொடுக்கலாமே..!**



## இன்றைய நாளில்...

- ★1791 – யூதர்களுக்கு முழுமையான குடியுரிமை வழங்குவதற்கு பிரான்ஸின் நாடாளுமன்றம் வாக்களித்தது.
- ★ 1825 – உலகின் முதலாவது பயணிகள் நீராவித் தொடருந்து இங்கிலாந்தில் சேவைக்கு விடப்பட்டது.
- ★ 1854 – “ஆர்க்டிக்” நீராவிக் கப்பல் அட்லாண்டிக் கடலில் மூழ்கியதில் 300 பேர் உயிரிழந்தனர்.
- ★ 1947 – தென்னிந்தியத் திருச்சபை சென்னையில் நிறுவப்பட்டது.
- ★ 1962 – யெமன் அரபுக் குடியரசு அமைக்கப்பட்டது.
- ★ 1994 – மியன்மாரில் இராணுவ ஆட்சியை எதிர்க்க மக்களாட்சிக்கான தேசிய அமைப்பை ஆங் சான் சுகி உருவாக்கினார்.
- ★ 1998 – கிளிநொச்சி நகரம் விடுதலைப் புலிகளினால் ஓயாத அலைகள் இரண்டு நடவடிக்கை மூலம் வெற்றி கொள்ளப்பட்டது.
- ★ 1998 – கூகுள் தேடுபொறி ஆரம்பிக்கப்பட்டது.
- ★ 2002 – கிழக்குத் தீமோர் ஐக்கிய நாடுகள் சபையில் இணைந்தது.
- ★ 2007 – நாசா டோன் விண்கலத்தை சிறுகோள் பட்டையை நோக்கி ஏவியது.
- ★ 2008 – சீன விண்வெளி வீரர் சாய் சிகாங்க் விண்வெளியில் நடந்த முதலாவது சீனர் என்ற சாதனையை ஏற்படுத்தினார்.

# உண்மையான பயங்கரவாதிகளை மக்களே கண்டறிய வேண்டும்

## மக்கள் மீது இந்தச் சட்டம் பிரயோகிக்கப்படும் என்பதால் மார்ச் மாதமே எதிர்ப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்துவிட்டதாக சாணக்கியன் எம்.பி. விளக்கம்

(க.கிஷாந்தன்)

சிஸ்டம் சேஞ்ச் (முறைமை மாற்றம்) கோரி போராடியவர்கள் இன்று தண்டிக்கப்படுகின்றனர். அவர்களுக்கு எதிராகவே பயங்கரவாதத் தடைச்சட்டம் பயன்படுத்தப்படுகின்றது. நாட்டுக்காக போராடிய அவர்கள் பயங்கரவாதிகள் அல்லர். உண்மையான பயங்கரவாதிகள் யாரென்பதை மக்கள் கண்டறிய வேண்டும் - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முற்றாக நீக்குமாறு வலியுறுத்தி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி, சர்வஜன நீதி அமைப்பு, தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புகளின் கூட்டமைப்பு ஆகியவற்றின் ஏற்பாட்டில் நாடளாவிய ரீதியில் கையெழுத்து திரட்டப்பட்டு வருகின்றது.

இதன் ஓர் அங்கமாக நுவரெலியா, ரிகில்கஸ்கட பகுதியில் நேற்று (26) நடைபெற்ற கையெழுத்து திரட்டும் நடவடிக்கையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே சாணக்கியன் இவ்வாறு கூறினார்.

இந்த பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்தும் ஆவணத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமானும் கையொப்பமிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், பயங்கரவாதத் தடைச்சட்டம் என இச்சட்டத்துக்கு



பெயர் இருந்தாலும், பயங்கரவாதத் தடுப்புக்கு எதிராக பயன்படுத்துவதில்லை. மாறாக, சாதாரண மக்கள் தற்போது இலக்கு வைக்கப்படுகின்றனர். பயங்கரவாதத் தடைச்சட்டத்திலுள்ள சரத்துகள் பயங்கரமானவை. வழக்கு தொடுக்காமல் பல வருடங்கள் தடுப்பில் வைத்து விசாரிக்கலாம், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைதான ஒருவர் பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்தை நீதிமன்றத்தை சாட்சியாக பயன்படுத்தலாம்.

இந்த பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்தும் கையெழுத்துப் போராட்டத்தை நாம் மார்ச் மாதமே ஆரம்பித்துவிட்டோம். ஏனெனில், இச்சட்டம் மக்கள்மீது பாயும் என்பது எமக்குத் தெரியும். தமக்கு விசுவாசமான வியாபாரிகளுக்கு அரசாங்கம் வரிச்சலுகை வழங்கும்போதே, இந்நாடு வங்குரோத்தடையும் என்பது எமக்குத் தெரியும். அந்நிய செலாவணிமீது கைவைத்தபோது, வரிசை யுகம் உருவாகும் என்பதும் தெரியும்.

இதற்கிடையில் மக்கள் எழுச்சிப் போராட்டம் வெடித்தது. நாட்டுக்காக போராடிய இளைஞர்கள் இன்று பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ், தண்டிக்கப்படுகின்றனர். வசந்த முதலிகே பயங்கரவாதியா? போராட்டக்காரர்கள் பயங்கரவாதிகளா?

உண்மையான பயங்கரவாதிகள் யார், உரத்தை இல்லாது செய்தது யார், அந்திய செலாவணியை இல்லாது செய்தது யார், வரிசை யுகத்தை உருவாக்கியது யார் , குழந்தைகளுக்கு பால்மாவை இல்லாது செய்தது யார், இவர்களே உண்மையான பயங்கரவாதிகள் - என்றார்.

## மர்ஹூம் சுஐப்பின் ஞாபகார்த்த கூட்டமும் "வாழும் ஆளுமை அல்ஹாஜ் சுஐப்" நூல் வெளியீடும்

(பீ.எம்.முக்தார்)

தர்கா நகர் ஸாஹிராக் கல்லூரி முன்னாள் அதிபரும் கல்விமானுமான மர்ஹூம் ஐ.எல்.எம்.சுஐப் ஞாபகார்த்த கூட்டமும் "வாழும் ஆளுமை அல்ஹாஜ் ஐ.எல்.எம்.சுஐப்" எனும் நூலின் வெளியீட்டு வைபவமும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் இரண்டாம் திகதி (02) பிற்பகல் 4.00 மணிக்கு தர்கா நகர் ஸாஹிராக் கல்லூரி நளீம் ஹாஜியார் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறும்.

மொரட்டுவை பல்கலைக்கழக முன்னாள் கணிதத்துறை தலைவர் கலாநிதி எம்.இஸட்.எம். மல்ஹ ஒருத்தீன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பேராதனை பல்கலைக்கழக விவசாய மற்றும் பொறியியல்துறை பேராசிரியர் எம்.ஐ.எம்.மௌஜூத், அக்கறைப்பற்று உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.ஏ.எம்.யூஸுப், எல்பிட்டிய தேசிய கடதாசிக் கூட்டுத்தாபன முன்னாள் பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.பாருக், பேருவளை இக்ரா தொழிற்பயிற்சி நிறுவனப் பணிப்பாளர் வை.ஐ.எம்.ரமீஸ், தர்கா நகர் அல்-ஹம்ரா மகா வித்தியாலய முன்னாள் அதிபர் எம்.இஸட்.எம்.நயீம் ஆகியோர் உரையாற்றவுள்ளதாக ஏற்பாட்டுக் குழு இணைப்பாளரும் இலங்கை வங்கியின் இந்தியா கிளையின் முன்னாள் முகாமையாளருமான கவிஞர் ரீ.எம்.ஸபா தெரிவித்தார்.

இந்நிகழ்வில் உலமாக்கள், கல்விமான்கள், அரசியல்வாதிகள், எழுத்தாளர்கள், ஊர்ப் பிரமுகர்கள் பலரும் கலந்துகொள்வர்.

மர்ஹூம் ஐ.எல்.எம்.சுஐப் தர்கா நகர் அல்-ஹம்ரா மகா வித்தியாலயம், தர்கா நகர் ஸாஹிராக் கல்லூரி, அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிகங கல்லூரி ஆகியவற்றில் அதிபராகவும், கொழும்பு ஸாஹிரா கல்லூரியில் ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளார்.

தர்கா நகர் இஷாஅத்துல் இஸ்லாம் அநாதை இல்லம், தர்கா நகர் முஅய்யதுல் இஸ்லாம் அரபுக் கல்லூரி, தர்கா நகர் ஜும்ஆ மஸ்ஜித் ஆகியவற்றில் பல்வேறு பதவிகளை வகித்து அளப்பரிய பணிகளைச் செய்த மர்ஹூம் ஐ.எல்.எம்.சுஐப் 2015ஆம் ஆண்டு உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதே உண்மையான நல்லிணக்கத்தின் முதற்படி

### ஜீவன் எம்.பி. நுவரெலியாவில் தெரிவிப்பு

(க.கிஷாந்தன்)

"பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதே உண்மையான நல்லிணக்கத்தின் முதல் படியாக அமையும்" என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முற்றாக நீக்குமாறு வலியுறுத்தி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி, சர்வஜன நீதி அமைப்பு, தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புகளின் கூட்டமைப்பு ஆகியவற்றின் ஏற்பாட்டில் நாடளாவிய ரீதியில் கையெழுத்து திரட்டப்பட்டு வருகின்றது.

இதன் ஓர் அங்கமாக நுவரெலியா, ரிகில்கஸ்கட பகுதியில் நேற்று (26) கையெழுத்து திரட்டப்பட்டது. இதில் பங்கேற்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் ஜீவன் தொண்டமான் எம்.பி. கையொப்பம் இட்டார்.

அதன் பின்னர் நுவரெலியாவில் நடைபெற்ற



ஊடக சந்திப்பின்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அரசியல் வேறுபாடுகள், கொள்கை வேறுபாடுகள் இருந்தாலும் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உள்ளது. இதற்கமையவே சாணக்கியன் எம்.பி. விடுத்த அழைப்பை ஏற்று மனுவில் நானும் கையொப்பமிட்டேன்.

இற்றைக்கு 43 ஆண்டுகளுக்கு முன்னர் தற்காலிகத் தீர்வாகவே பயங்கரவாதத் தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால், போர் முடிவடைந்து பல வருடங்கள் கடந்தும் அந்தச் சட்டம் நீடிக்கின்றது. இதனை ஏற்க முடியாது. உண்மையான ஜனநாயகம் மற்றும் நல்லிணக்கத்தின் முதல்படியாக அச்சட்டத்தை நீக்க வெண்டும்.

இது தொடர்பில் நாம் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ளோம். பயங்கரவாதத் தடைச் சட்டத்தை காங்கிரஸ் தற்போது எதிர்க்கவில்லை. முன்னர் இருந்தே எதிர்த்து வருகின்றோம். எமது மறைந்த தலைவர் ஆறுமுகன் தொண்டமான் நீதிமன்றம்கூட சென்றுள்ளார் - என்றார்.

## இராணுவத்தின் 73ஆவது ஆண்டுவிழாவை முன்னிட்டு இஸ்லாமிய சிறப்பு பிரார்த்தனைகள்



இராணுவத்தின் 73ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்று (26) கொள்ளுப்பிட்டி ஜும்மா பள்ளிவாசலில் இராணுவ அதிகாரிகள், சிப்பாய்கள் மற்றும் இஸ்லாமிய மத முக்கியஸ்தர்களின் பங்கேற்புடன் இராணுவத்திற்கு ஆசி வேண்டி சிறப்பு இஸ்லாமிய வழிபாடுகள் இடம்பெற்றன.

பிரதம விருந்தினராக கலந்துகொண்ட இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகேயை பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவர் அல்-ஹாஜ் மொஹமட் கலீல், செயலாளர் மற்றும் கொள்ளுப்பிட்டி ஜும்மா பள்ளிவாசல் நிர்வாக சபை சபையின் உறுப்பினர்கள், இராணுவ முஸ்லிம் சங்கத் தலைவர் பிரிகேடியர் அஷ்கர் முத்தலிப் ஆகியோர் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளுடன் இணைந்து வரவேற்றனர்.

## பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை இரத்தினபுரியிலும் முன்னெடுப்பு





பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை நேற்று முன்தினம் (25) முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய, பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை இரத்தினபுரியில் மக்களின் பேராதரவுடன் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இரா.சாணக்கியன், அரசியல்வாதிகள், சர்வமதத் தலைவர்கள், பொதுமக்கள் என பலரும் இந்த நிகழ்வில் பங்குபற்றியிருந்தனர்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை நீக்குமாறு வலியுறுத்தி இலங்கை தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் காங்கேசன்துறை முதல் ஹம்பாந்தோட்டை வரையில் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றதென்பது குறிப்பிடத்தக்கது.

## நாடாளுமன்றம் - கொழும்பு பல்கலைக்கழகம் இணைந்து புதிய பாடநெறி ஆரம்பித்துவைப்பு





இலங்கை நாடாளுமன்றம் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகம் என்பன இணைந்து வரலாற்றில் முதல் தடவையாக நாடாளுமன்றத்தின் செயற்பாடுகள் மற்றும் நடைமுறைகள் குறித்த குறுகியகால பாடநெறியொன்றை ஆரம்பித்துள்ளன.

கடந்த 16ஆம் திகதி கொழும்பு பல்கலைக் கழகத்தில் பாடநெறியின் அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெற்றதுடன், ஆரம்ப உரையை நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க நிகழ்த்தியிருந்தார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானம் மற்றும் பொதுக் கொள்கைகள் திணைக்களத்தின் இறுதியாண்டு பட்டதாரி மாணவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தப் பாடநெறியின் வளவாளர்களாக நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகம் மற்றும் நாடாளுமன்ற செயலகத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் காணப்படுகின்றனர்.

இலங்கை நாடாளுமன்றம் பல்கலைக்கழகமொன்றுடன் இணைந்து இவ்வாறான கல்விப் பாடநெறியொன்றை ஆரம்பித்திருப்பது இதுவே முதல் தடவையாகும்.

இந்தப் பாடநெறியினூடாக ஜனநாயகம் மற்றும் நாடாளுமன்ற செயற்பாடுகள், நாடாளுமன்றத்தின் சட்டவாக்க நடைமுறைகள், நாடாளுமன்ற அமைப்பின் பரிணாமம், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒழுக்கக்கோவை, நிலையியற் கட்டளைகள், பொதுமக்கள் சேவை செயற்பாட்டுக்கான தொடர்பு, பெண்கள் பிரதிநிதித்துவம் போன்ற விடயதானங்கள் குறித்து புரிதல்கள் இந்தப் பாடநெறியின் ஊடாக வழங்கப்படவுள்ளன. நாடாளுமன்ற விவகாரங்கள் மற்றும் நடைமுறைகள் தொடர்பான பாடநெறியில் நான்கு விரிவுரைகள் மற்றும் நாடாளுமன்ற சுற்றுப்பயணம் என்பன உள்ளடங்கியுள்ளன.

பாடநெறியின் அங்குரார்ப்பண நிகழ்வில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் எச்.டி.கருணாரத்ன, கொழும்பு பல்கலைக்கழகத்தின் கலைபீடத்தின் சிரேஷ்ட பேராசிரியர் லசந்த மானவடு, கொழும்புப் பல்கலைக்கழகத்தின் அரசியல் மற்றும் பொதுக் கொள்கைகள் திணைக்களத்தின் தலைவர் கலாநிதி பிரதீப் பீரிஸ், சிரேஷ்ட விரிவுரையாளர் தம்ம திசாநாயக்க, நாடாளுமன்ற பணியாட்தொகுதியின் பிரதானியும், பிரதி செயலாளர் நாயகமுமான குஷானி ரோஹனதீர, நாடாளுமன்ற உதவிச் செயலாளர் நாயகம் டிகிரி கே.ஜயதிலக்க, சட்டவாக்கப் பணிப்பாளரும், தொடர்பாடல் திணைக்களபதில் பணிப்பாளருமான ஜனகாந்த சில்வா ஆகியோர் கலந்துகொண்டனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

### 26.09.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 121 0142 | 132 85 |
| கனேடியன் டொலர் | 150 6778 | 162 5485 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 38 1440 | 41 21 7 |
| யூரோ | 233 0652 | 247 7578 |
| ஜப்பான் யென் | 1 37 5 | 1 4715 |
| சிங்கப்பூர் டொலர் | 137 5745 | 148 2062 |
| ஸ்ரேலிங் பவுன் | 265 6 48 | 280 8435 |
| சுவிஸ் பிரான்ங் | 251 2704 | 267 7252 |
| ஐ.அ.டொலர் | 248 0765 | 258 8260 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 851 4501 |
| குவைட் | குவைட் தினார் | 0,06 723 |
| ஓமான் | ஓமான் றியால் | 831 4741 |
| கட்டார் | கட்டார் றியால் | 87 8472 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 3407 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 6883 |

# ராஜபக்ஷக்கள் வஞ்சகர்கள்; ரணில் விரைவில் உணர்வார்

## இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவிப்பு





(க.கிஷாந்தன்)

''செஞ்சோற்றுக் கடன் தீர்க்க சேராத இடம் சேர்ந்து வஞ்சத்தில் வீழ்ந்ததையும், ராஜபக்ஷக்கள் வஞ்சகர்கள் என்பதையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரைவில் உணர்வார்" - என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

மேலும், கட்சித் தலைவர்களின் அனுமதியின்றியே தேசிய பேரவைக்கு உறுப்பினர்கள் பெயரிடப்பட்டுள்ளனர் எனவும் மனோ கணேசன் வெளிநாட்டிலுள்ள நிலையில், அவரின் பெயர்கூட இடம்பெற்றுள்ளது எனவும் இராதாகிருஷ்ணன் சுட்டிக்காட்டினார்.

அக்கரபத்தனை பகுதியில் நேற்று முன்தினம் (25) நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனிப்பட்ட ரீதியில் நல்லவர். இன்றும் அவரை நாம் மதிக்கின்றோம். ஆனால், அவர் இன்று இருக்கும் இடம்தான் சரியில்லை. அதாவது தனி ஆளாக இருப்பதால், செஞ்சோற்றுக் கடன் தீர்க்க சேராத இடம் சேர்ந்து, வஞ்சத்தில் வீழ்ந்துள்ளார்.

ராஜபக்ஷக்கள் வஞ்சகர்கள் என்பதையும் அவர் உணர்வார். மக்களின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ராஜபக்ஷக்களின் சொல்கேட்டே ஜனாதிபதி ரணில் இதனை செய்துள்ளார்.

அரசாங்கத்தில் இணைவதற்கு எமக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால், மக்கள் ஆணை இல்லாத இந்த ஆட்சியை அங்கீகரிப்பதற்கு நாம் தயாரில்லை. சர்வதேச சமூகம்கூட இந்த அரசாங்கத்தை ஏற்கவில்லை. மக்கள் ஆணையுடன் புதிய அரசாங்கமொன்று அமைய வேண்டும். அவ்வாறு அமையும் அரசாங்கத்துக்கு நாம் ஆதரவு வழங்குவோம்.



**தாக்குதலுக்கு கண்டனம்**

கொழும்பில் சனிக்கிழமை (24) நடைபெற்ற போராட்டத்தில் பங்கேற்றவர்களை பொலிஸார் தாக்கியுள்ளனர். குறைந்தபட்ச அதிகாரத்தைப் பயன்படுத்தாமல், தடியடி கூட நடத்தியுள்ளனர். இந்த அடக்குமுறை செயற்பாட்டை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

நாட்டில் கருத்துச் சுதந்திரம் உள்ளதென வெளிவிவகார அமைச்சர் ஜெனிவாவில் உரையாற்றுகின்றார். ஆனால், அமைதியாக போராடும் சுதந்திரம் கூட நாட்டில் இல்லை. எதிர்காலத்தில் போராட முடியாத வகையில் பல இடங்கள் அதி உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது அடக்குமுறையின் உச்சக்கட்டம். அதனை எதிர்க்கின்றோம். ஜனநாயகம் இல்லாத அதேபோல அடக்கி - ஒடுக்கி ஆளும் அரசாங்கத்துக்கு உலக நாடுகள் உதவாது என்பதைப் புரிந்து செயற்பட வேண்டும்.

தேசிய பேரவையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிராகரித்துள்ளது. ஜே.வி.பி, சுதந்திரக்கட்சி என்பனவும் மறுத்துள்ளன. நாமும் அதனை ஏற்கவில்லை. பெயர் இடம்பெற்றுள்ளமை தமக்கு தெரியாது என விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் ஆகியோர் தெரிவித்துள்ளனர். மனோ கணேசன் வெளிநாட்டில் உள்ளார். அவரின் பெயரும் உள்ளடக்கப்பட்டுள்ளது" - என்றார்.




**நுவரெலியா - ஹங்குராங்கெத்த தேர்தல் தொகுதிக்குட்பட்ட ரிகிலகஸ்கட நகரில், நேற்று திங்கட்கிழமை (26) காலை, பயங்கரவாத தடுப்புச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து வேட்டை இடம்பெற்றது. இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் உட்பட பலர் கலந்துகொண்டனர்.**

(படங்கள் - செ.திவாகரன்)

# நுவரெலியாவில் சமாதான ஊர்வலம்






(மஸ்கெலியா நிருபர்)


இலங்கை சமாதான பேரவை, நுவரெலியா மாவட்ட சர்வமத அமைப்பு மற்றும் நுவரெலியா மாவட்ட தேசிய இளைஞர் பேரவை என்பன இணைந்து நுவரெலியா நகரில் சமாதான ஊர்வலம் ஒன்றை நடத்தின.

இந்நிகழ்வு சுமார் 4 மணித்தியாலம் இடம்பெற்றது. இதன்போது அப்பகுதியைச் சேர்ந்த பள்ளிவாசல், கிறிஸ்தவ தேவாலயம், பௌத்த விகாரை மற்றும் காயத்ரி அம்மன் ஆலயம் ஆகியவற்றுக்கு சென்று சமய வழிபாட்டில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் நுவரெலியா பொலிஸ் நிலைய உயர் அதிகாரிகள் கலந்து கொண்டதுடன், பாதுகாப்பும் வழங்கினர். மூன்று நாட்கள் சமாதானம் பற்றிய கலந்துரையாடல் நடைபெறவுள்ளதாக சர்வமத குழுவின் தலைவர் எமில் திசாநாயக்க தெரிவித்தார்.



**தலவாக்கலை கிரேட் வெஸ்டன் பாடசாலையில் நவராத்திரி பூஜையின் முதல் நாளான நேற்று (26) கும்பம் வைக்கப்பட்டு துர்க்கை பூஜை இடம்பெற்றது. இந்நிகழ்வில் பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம்.பாரிஸ், பிரதி அதிபர் விஜயசுந்தரம் மற்றும் பாடசாலையின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டிருந்தனர். (தலவாக்கலை நிருபர்)**

# ஊடகவியலாளர் - கேலிச்சித்திரக் கலைஞர் அஸ்வினின் நினைவேந்தல் நிகழ்வு










(யாழ். நிருபர்)

மறைந்த ஊடகவியலாளரும், கேலிச்சித்திரக் கலைஞருமான அஸ்வின் சுதர்சனின் 6 ஆண்டுகள் நினைவேந்தல் நிகழ்வும், ஞாபகார்த்த ஊடக கற்கை மாணவருக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் (25) நடைபெற்றது.

யாழ். ஊடக அமையத்தில் மாலை 3 மணியளவில் நடைபெற்ற இந்நிகழ்வில் அஸ்வின் குறித்த ஞாபகார்த்த உரைகள் இடம்பெற்றதுடன், அஸ்வினின் குடும்பத்தினரால் முன்னெடுக்கப்பட்டுவரும் ஊடக கற்கைநெறியை தொடரும் மாணவர்களில் தெரிவுசெய்யப்பட்ட தேவையுடைய மாணவருக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

ஈழநாடு பத்திரிகையில் தனது ஊடகப்பயணத்தை ஆரம்பித்த அஸ்வின்,



வலம்புரி, சுடரொளி, வீரகேசரி, தினக்குரல் ஆகிய பத்திரிகைகளில் தனக்கான முத்திரைகளைப் பதித்துள்ளார். அதேவேளை, வீரகேசரியின் யாழ்.ஓசை பதிப்பின் ஆசிரியராகவும் கடமையாற்றினார். இதில் இவர் எழுதிய 'கேட்டியளே சங்கதி' என்ற பத்தி எழுத்து பல இடங்களிலும் எதிரொலித்தது. அந்த எழுத்து ஒரு மௌனப் புரட்சியையும் செய்தது. இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனமும் சிறந்த ஊடகவியலாளர் விருதை 'கேட்டியளோ சங்கதி' பத்திக்காக வழங்கி கௌரவித்தது.

இறுதியாக தினக்குரல் பத்திரிகையில் இவர் வரைந்த கருத்தாழமிக்க கேலிச்சித்திரங்கள் வாசகர்களை மட்டுமன்றி, அரசியல் தலைவர்களையும் பேசவைத்தது. அவரது கேலிச்சித்திரங்கள் பலவும் இன்றைய காலத்திற்கும் பொருத்தமான தீர்க்கதரிசன ஓவியங்களாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் போதைப்பொருள் விற்பனைக்கு சிறுவர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள்

## பொலிஸார் அதிர்ச்சித் தகவல்

(யாழ். நிருபர்)

யாழ். மாவட்டத்தில் உயிர்க்கொல்லியான ஹெரோயின் போதைப்பொருளை விற்பனை செய்ய சிறுவர்கள் மற்றும் மாணவர்கள் பயன்படுத்தப்படுகின்றனர் என பொலிஸார் அதிர்ச்சித் தகவல் வெளியிட்டுள்ளனர்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சிறுவர் பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடலிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் அதிகளவில் சிறுவர்கள், பாடசாலை மாணவர்கள் ஹெரோயின் உள்ளிட்ட அபாயகரமான ஹெரோயின் போதைப்பொருள் விற்பனைக்கு பயன்படுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் பலர் அதற்கு அடிமையாக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, பெற்றோரை இழந்த பிள்ளைகள், பெற்றோரால் அதிகம் கவனிக்கப்படாத பிள்ளைகள், பெற்றோர் வெளிநாடுகளில் உள்ள சிறுவர்கள் இதற்கு அதிகம் இலக்கு வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், இவற்றைக் கட்டுப்படுத்த பொலிஸார் துரிதகதி நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர் எனவும் அதற்கு அனைத்துத் தரப்பினதும் ஒத்துழைப்பு மிகவும் அவசியம் எனவும் பொலிஸார் சுட்டிக்காட்டினர்.

# தேவைப்பாடுடைய 50 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கிவைப்பு

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி பகுதியில் தேவைப்பாடுடைய 50 குடும்பங்களுக்கு நேற்று முன்தினம் (25) உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியைச் சேர்ந்த லண்டனில் வசிக்கும் ஞானானந்தா குடும்பத்தினரின் நிதிப்பங்களிப்பில், சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ம.நடனதேவன் ஊடாக குறித்த உதவித்திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மீசாலை வடக்கு, அல்லாரை, உதயசூரியன், மகிழங்கேணி மற்றும் நுணாவில் பகுதிகளைச் சேர்ந்த தேவைப்பாடுடைய 50 குடும்பங்களுக்கே



குறித்த உதவித்திட்டம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கில் 5 ஆண்டுகளில் 742 சிறுவர் துஷ்பிரயோகங்கள்

வடமாகாணத்தில் கடந்த 5 ஆண்டுகளில் 742 சிறுவர்கள் பாலியல் ரீதியாகவும், உடலியல் ரீதியாகவும் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அத்துடன், இளவயது கர்ப்பம் காரணமாக 49 சிறுமிகள் பாதுகாப்பு இல்லத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

- இவ்வாறு சிறுவர் நன்னடத்தை திணைக்களத்தின் தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் யாழ்ப்பாணம் மாவட்டத்திலேயே அதிகளவான துஷ்பிரயோக சம்பவங்கள் ஒவ்வொரு ஆண்டும் பதிவாகியுள்ளன.

2018ஆம் ஆண்டு பாலியல் ரீதியாக 105 பேரும், உடலியல் ரீதியாக 91 பேரும் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

2019ஆம் ஆண்டு 106 பேர் பாலியல் ரீதியாகவும், 65 பேர் உடலியல் ரீதியாகவும் 2020ஆம் ஆண்டு பாலியல் ரீதியாக 118 பேரும், உடலியல் ரீதியாக 52 பேரும், 2021ஆம் ஆண்டு பாலியல் ரீதியாக 123 பேரும், உடலியல் ரீதியாக 15 பேரும், இந்த ஆண்டு கடந்த ஜூன் மாதம் வரையில் பாலியல் ரீதியாக 59 பேரும், உடலியல் ரீதியாக 8 பேரும் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

# யாழ். தாவடியிலுள்ள வீடொன்றினுள் பெற்றோல் குண்டுவீச்சு

யாழ்ப்பாணம் தாவடி பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் புகுந்த இனந்தெரியாத நபர்கள் பெற்றோல் குண்டு வீசியுள்ளதுடன், வன்முறையில் ஈடுபட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இரண்டு மோட்டார் சைக்கிள்களில் நேற்று முன்தினம் இரவு வந்த ஆறு பேர் கொண்ட குழுவே இவ்வாறு வன்முறையில் ஈடுபட்டுள்ளது.

அவர்கள் பெற்றோல் குண்டை வீசியது மட்டுமன்றி, வீட்டிலிருந்த சொத்துகளுக்கும் தீ வைத்துள்ளனர். வீட்டின் முன்பாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தினால், 18 இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சம்பவத்தினை மேற்கொண்ட நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களை கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்த சுன்னாகம் பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

# சர்வமதத் தலைவர்கள் அநுராதபுரத்தில் சந்திப்பு




(அநுராதபுரம் செய்தியாளர்)

இனங்களுக்கிடையில் நல்லெண்ணத்தை ஏற்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சர்வமதத் தலைவர்களது விசேட ஒன்றுகூடல் நிகழ்வு அநுராதபுரத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்த விசேட நிகழ்வை வடமத்திய மாகாண கரித்தாஸ் செத்சவிய அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது.

அன்றைய தினம் சிலாபம் பகுதியிலிருந்து அநுராதபுரம் பகுதிக்கு நல்லிணக்க நோக்கத்துடன் வருகைதந்திருந்த சர்வமதத் தலைவர்களது குழுவும் இந்த விசேட கலந்துரையாடலில் கலந்துகொண்டது.

இதன்போது நல்லிணக்கம், புரிந்துணர்வு தொடர்பாகவும் சர்வமதத் தலைவர்களது பங்களிப்புகள் பற்றியும் பேசப்பட்டது. அதனைத் தொடர்ந்து அநுராதபுரம் மாவட்ட சர்வமதத் தலைவர்களும் சிலாபத்திலிருந்து அநுராதபுரத்திற்கு வருகைதந்திருந்த சர்வமதத் தலைவர்களும் இணைந்து அநுராதபுரம் அட்டமஸ்தான விகாரை மற்றும் ஜும்மா பெரியபள்ளிவாசல், கதிரேசன் கோயில் ஆகிய இடங்களுக்குச் சென்று மதத்தலைவர்களை சந்தித்து நல்லிணக்கத்தின் முக்கியத்துவம் பற்றி கலந்துரையாடியுள்ளனர்.



# மக்களின் சுதந்திரத்தைப் பறித்து சர்வாதிகாரியாக முயற்சிக்கும் ரணில்

## அநுரகுமார திசாநாயக்க குற்றச்சாட்டு

அமைதியான போராட்டக்காரர்கள் மீதான அடக்குமுறையை விமர்சிக்கும் அதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களின் சுதந்திரத்தை முற்றாகப் பறித்து சர்வாதிகாரியாகச் செயற்பட முயல்வதாக மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

வாழ்க்கைச் செலவு, வட்டி வீத அதிகரிப்பு மற்றும் பல இன்னல்களுக்கு எதிராக மக்கள் எழுச்சி பெறுவதைத் தடுக்க ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் அடக்குமுறையைக் கையாள்வதாக கட்சியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

இந்த சீர்குலைக்கும் நடவடிக்கைக்கு எதிராக நீதித்துறை, அரசியலமைப்பு ஆகியவற்றிற்குள் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து மக்களை வீதிக்கு அழைத்துச் செல்வோம் என்றார்.

அடக்குமுறை மூலம் நாட்டை ஆட்சிசெய்ய முடியும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நம்பினால் அது வெறும் கனவு என அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தம்மைப் பாதுகாக்க பல இராணுவப் படையணிகளை வைத்திருந்தவர், ஜனாதிபதி மாளிகைக்குள் பதுங்கு குழியைக் கூட வைத்திருந்தார். மக்கள் எதிர்ப்பால் தப்பியோட நேரிட்டது.

ரணில் விக்கிரமசிங்கவும் உயர் பாதுகாப்பு வலயங்களை அறிவித்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முயற்சிக்கிறார். விரைவில் அவர் தலைமறைவாக வேண்டும். ஒரு பதுங்கு குழி மற்றும் அவரது உயர் பாதுகாப்பு வலயங்கள் போராட்டக்காரர்களால் ஆக்கிரமிக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

மக்கள் மீதான இந்த அடக்குமுறையை உடனடியாக நிறுத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்திய அவர், இந்த சீர்குலைக்கும் நடவடிக்கைக்கு எதிராக அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாகவும் தெரிவித்தார்.

# பிரதேச சபையின் கவனயீனம்; 38 இலட்ச ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட சிறுவர் பூங்கா கைவிடப்பட்ட நிலையில்





(கெலும் குணதிலக்க)

படல்கும்புர நகரில் போகஹபெலெஸ்ஸ வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள காணியில் சுமார் 38 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட சிறுவர் பூங்கா கவனிப்பாரற்று கைவிடப்பட்டுள்ளது.

நல்லாட்சி அரசாங்கத்தில் 2019ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட இந்த சிறுவர் பூங்கா மீது பாரிய மரங்கள் வெட்டி சாய்க்கப்பட்டுள்ளன. பிரதேச சபையின் அனுமதியுடனேயே இவ்வாறு மரங்கள் தரிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். பாரிய மரம் ஒன்று வெட்டப்பட்டதால் சிறுவர் பூங்காவின் நுழைவாயில் உள்ளிட்ட விளையாட்டு உபகரணங்கள் சேதத்துக்குள்ளாகியுள்ளன. இதன் காரணமாக அப்பகுதி சிறுவர்களுக்கு விளையாடுவதற்கான வாய்ப்பு தட்டிக்கழிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

# பதிவுசெய்த முகவர் ஊடாக பொருட்களை அனுப்பவும்

## வெளிநாட்டில் உள்ளோரிடம் சுங்கத் திணைக்களம் கோரிக்கை

வெளிநாட்டுப் பணியாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் நாட்டுக்குப் பொருட்களை அனுப்பும்போது இலங்கை சுங்கப் பதிவு செய்யப்பட்ட முகவர் நிறுவனங்களுடன் மாத்திரம் கையாளுமாறு சுங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த காலங்களில் வெளிநாட்டுப் பணியாளர்கள் இலங்கைக்கு அனுப்பும் பொருட்கள் தவறாக இடம்பெயர்ந்தமை தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைத்தன.

இந்த விசாரணையில், சுங்கத்தில் பதிவு செய்யப்படாத நிறுவனங்கள் மூலம் இலங்கைக்கு பொருட்கள் அனுப்பப்பட்டமை தெரியவந்துள்ளது.

பதிவுசெய்யப்படாத நிறுவனங்களால் பொருட்களை அனுப்புவதற்கு அவர்கள் பொறுப்பேற்க முடியாது என்பதால், சுங்க பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் மூலம் மட்டுமே பொருட்களை அனுப்புமாறு தெரிவிக்கப்படுகின்றது.

# ஒரு வாரத்தில் யானை தாக்கி அநுராதபுரத்தில் மூவர் உயிரிழப்பு

(அநுராதபுரம் செய்தியாளர்)

அநுராதபுரம் மாவட்டத்தில் ஒரு வார காலத்துக்குள் காட்டுயானைகளின் தாக்குதலில் மூவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது.

அநுராதபுரம் பொலிஸ் வலயத்திலுள்ள மிஹிந்தலை மற்றும் மஹவிளச்சிய, மதவாச்சி பிஹிம்பியகொல்லாவ பொலிஸ் பிரிவுகளிலேயே கடந்த 19ஆம் திகதியும் 21ஆம் திகதியும் இச்சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. மிஹிந்தலை மரதன்கல்ல எலபங்குளம் பகுதியை வசிப்பிடமாகக்கொண்ட 51 வயதுடைய இரு பிள்ளைகளின் தந்தையும், மஹவிளச்சிய எலபத்கம துனுமண்டலாவ பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட 30 வயதுடைய இளம் விவசாயி ஒருவரும் மதவாச்சி பிஹிம்பியகொள்ளாவ பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட 56 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான விவசாயி ஒருவருமே இவ்வாறு காட்டு யானைகளின் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளனர். யானை - மனிதர் மோதல்களுக்கு உரிய தீர்வு இல்லாத காரணத்தினாலேயே இது போன்ற சோகச் சம்பவங்கள் இடம்பெறுவதாக அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

# பேஸ்புக் விருந்தில் போதைப்பொருள் பாவனை

# 42 மாணவர்கள் உள்ளிட்ட 300 பேர் கம்பளையில் அதிரடியாக கைது



கம்பளையில் மிகவும் இரகசியமான முறையில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட முகநூல் விருந்தொன்றை மத்திய மாகாண கலால் திணைக்கள அதிகாரிகள் குழு சோதனையிட்டுள்ளதுடன், அவர்களில் சுமார் 42 பேர் பாடசாலை மாணவர்கள் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கலால் திணைக்களத்தின் தகவலின்படி, இந்த விருந்தில் 300இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டுள்ளனர். அந்த விருந்தில் 14 முதல் 18 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் பங்கேற்றதாக தெரிவித்த கலால்துறை அதிகாரிகள், அந்த மாணவர்களை அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மத்திய மாகாணத்துக்குப் பொறுப்பான உதவி கலால் ஆணையாளர் உபுல் செனவிரத்னவுக்கு கிடைத்த தகவலின்படி, முகநூல் குழுவுடன் கலால் அதிகாரிகளையும் விருந்தில் இணைத்து தகவல்களைப் பெற்றுள்ளார்.

இந்த பேஸ்புக் விருந்துபசாரம் நேற்று முன்தினம் பிற்பகல் 02 மணி தொடக்கம் நள்ளிரவு வரை நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. இதன்போது இரு இளம் கலால் அதிகாரிகளும் இரண்டு பெண் அதிகாரிகளும் காதலர்கள்போல் நடித்து விருந்தில் கலந்துகொண்டனர்.

மத்திய மாகாணங்களுக்குப் பொறுப்பான உதவி கலால் ஆணையாளரின் பணிப்புரையின் பேரில், கம்பளை, ஹட்டன் மற்றும் நுவரெலியா கலால் நிலையங்களைச் சேர்ந்த அதிகாரிகளின் பங்களிப்புடன் அன்றையதினம் மாலை 5 மணியளவில் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இந்த சோதனையின்போது, பங்கேற்பாளர்களில் பெரும்பாலானோர் பல்வேறு போதைப்பொருள் மற்றும் மதுபானங்களை பயன்படுத்தியதாகவும், மிகவும் அநாகரிகமான முறையில் நடந்துகொண்டதாகவும் கலால் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதன்போது கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களை வைத்திருந்த 12 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

# கைக்குண்டு வைத்திருந்த ஒருவர் ராகமவில் கைது



பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய நபரை வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டுடன் ராகமவில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ராகம - வல்பொல பிரதேசத்தில் உள்ள மூன்று வீடுகளுக்கு கடந்த 20ஆம் திகதி சென்று கூரிய வாள், கத்தியைக்கொண்டு தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில், 36 வயதுடைய நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களுக்கமைய, ராகமவில் கைக்குண்டை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இதேவேளை, பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய குறித்த நபர் மீது வெலிசர, நீர்கொழும்பு, கம்பஹா ஆகிய நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.







கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமாரை வரவேற்குமுகமாக ஏற்பாடு செய்யப்பட்ட விசேட நிகழ்வு பதுளை - ஊவா மாகாண சபை கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போது இராஜாங்க அமைச்சர் வரவேற்கப்படுவதையும் பூஜை நிகழ்வுகளில் பங்கேற்றமையும் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம். (பதுளை செய்தியாளர்)


திகதி 25.09.2022 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4889
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,886,620.00
ஆங்கில எழுத்து T வெற்றி இலக்கங்கள் 9 7 1 1 1 0
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 15,716,633.00

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3131
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,358,400.00
ஆங்கில எழுத்து D வெற்றி இலக்கங்கள் 26 45 65 77
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 78,098,262.80

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1344
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,579,920.00
வெற்றி இலக்கினம் விருச்சிகம் வெற்றி இலக்கங்கள் 5 1 3 6 9 4
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,070,569.60

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 919
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,918,520.00
வெற்றி இலக்கினம் H வெற்றி இலக்கங்கள் 10 18 21 32
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 127,017,302.40

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 198
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,909,800.00
இலக்கினம் விருச்சிகம் வெற்றி இலக்கங்கள் 36 46 54 55 விசேட இலக்கினம் விருச்சிகம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,535,093.60

கோடி 27 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1237
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,730,000.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 272,400,546.00
J 24 09 39 56 64
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 பெக்ஸ்: 011-4669475
Email : info@nlb.lk Web : www.nlb.lk

# மட்டக்களப்பு காந்தி பூங்காவில் தியாகதீபம் திலீபனின் 35ஆவது நினைவேந்தல் அனுஷ்டிப்பு




(கனகராசா சரவணன்)

தியாகதீபம் திலீபனின் 35ஆவது நினைவேந்தல் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் நேற்று (26) எழுச்சிபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் கணபதிப்பிள்ளை குககுமரராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த நினைவேந்தல் நிகழ்வில் கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் உணர்வாளர்கள் பலர் கலந்துகொண்டு தியாகதீபம் திலீபனின் உயிர்நீத்த காலை 10.48 மணிக்கு அவரின் திருவுருவப்படத்திற்கு மாவீரர் ஒருவரின் தாயார் ஈகைச்சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தினார்.

இதனைத் தொடர்ந்து நினைவேந்தலில் கலந்துகொண்டவர்கள் அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்து, பூதூவி இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கல்முனை கடற்கரை வீதியில் தீ விபத்து; உணவகமொன்று முற்றாக எரிந்து நாசம்!






(எம்.என்.எம்.அப்ராஸ்)

கல்முனை கடற்கரை வீதியிலுள்ள உணவகம் ஒன்றில் திடீரென ஏற்பட்ட தீ விபத்து காரணமாக உணவகம் முற்றாக எரிந்து நாசமாகியது.

கல்முனை கடற்கரை வீதியில் நூரானியா மையவாடிக்கு முன்பாக அமைந்துள்ள உணவகமொன்றில் நேற்று முன்தினம் பிற்பகல் (25) இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ இடத்தில் பொதுமக்கள், கல்முனை மாநகர தீயணைப்புப் பிரிவினர் இணைந்து நீண்ட நேரத்தின் பின்னர் தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளனர். எனினும், தீ விபத்தால் உணவகத்தின் பொருட்கள் முழுமையாக சேதமடைந்ததை அவதானிக்க முடிந்தது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

நேற்றுமுன்தினம் (25) பிற்பகல் உணவகத்தில் ஊழியர்கள் உணவுப்பொருட்கள் தயாரித்துக்கொண்டிருந்தவேளையில் திடீரென ஏற்பட்ட சமையல் எரிவாயு கசிவு காரணமாக தீ விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரியவருகின்றது.

# ஹெரோயினுடன் ஒருவர் கைது

(கோணாவத்தை நிருபர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒலுவிலில் பிரதேசத்தில் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின்படி உப பொலிஸ் பரிசோதகர் நூர்தீன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசத்திற்கு சென்று நபர் ஒருவரை கைதுசெய்துள்ளதுடன், அவரிடமிருந்து 65 மில்லிகிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் (25) ஆஜர்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 7ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சட்டவிரோதமாக ஆற்றுமண் ஏற்றிவந்த நபருக்கு அபராதம்

(கோணாவத்தை நிருபர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பள்ளிக்குடியிருப்பு பிரதேசத்தில் அனுமதிப்பத்திர நிபந்தனையைமீறி ஆற்றுமண் ஏற்றிவந்த டிப்பர் வாகன உரிமையாளருக்கு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தினால் 15000 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி ஆற்று மண் ஏற்றி வந்த வாகனத்தை பொலிஸார் கைப்பற்றியிருந்தனர்.

கைப்பற்றப்பட்டிருந்த டிப்பர் வாகனத்தை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நேற்று (26) ஆஜர்படுத்தியபோது மேற்படி தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

வாகன உரிமையாளரினால் குறித்த தண்டப்பணம் செலுத்தப்பட்டதோடு வாகனமும் விடுவிக்கப்பட்டது




அட்டாளைச்சேனை பிரதேசத்தின் ஒலுவில் நான்காம் பிரிவில் போதை ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு அந்நூர் ஜும்மா பள்ளிவாசலில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் செனவிரத்ன மற்றும் பதில் பொறுப்பதிகாரி எஸ்.எம்.சதாத், பிரதேச சபை தவிசாளர் ஏ.எல்.அமானுள்ளா, பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் டொக்டர் ஏ.எல்.அலாவுதீன், அந்நூர் ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் ஏ.எல்.நஸ்ரூல்லாஹ் மற்றும் பேஷ் இமாம், உலமாக்களும் கலந்து சிறப்பித்தனர். (திராய்க்கேணி நிருபர்)

---

# வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்த சம்மாந்துறை டைட்டன்ஸ்





(மாளிகைக்காடு நிருபர்)

சம்மாந்துறை டைட்டன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் சம்மாந்துறை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற மென்பந்து கிரிக்கெட் தொடரின் சம்பியனாக டைட்டன்ஸ் அணி தெரிவானது.

பிராந்தியத்தில் காணப்படுகின்ற பிரபலமான 32 கழகங்கள் இத்தொடரில் பங்குபற்றின. இறுதிப் போட்டிக்குள் சம்மாந்துறை டைட்டன்ஸ் அணியும், சம்மாந்துறை நியூசன் அணியும் நுழைந்தன. இறுதிப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற டைட்டன்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட ஓவர்களில் 26 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. 26 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய நியுசன் அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவர்களில் 17 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டு தோல்வியடைந்தது.

இறுதிப்போட்டி அதிதிகளாக இளைஞர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் அமீர் அப்னான், சம்மாந்துறை சுலைமான் மோட்டார்ஸ் நிறுவன உரிமையாளர் பர்ஹார், டைட்டன்ஸ் கழகத்தின் செயலாளர் ரையிஸ் ஆகியோர் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினர்.

# உலக சாதனையுடன் தொடரைக் கைப்பற்றிய இந்தியா




ஆஸி. அணியுடனான 3 போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 தொடரை 2-1 என்ற அடிப்படையில் கைப்பற்றிய இந்திய அணி உலக சாதனையும் படைத்தது.

முதலிரு போட்டிகள் நிறைவில் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் இருந்த நிலையில், தொடர் வெற்றியாளரை தீர்மானிக்கும் போட்டி நேற்று ஹைதராபாத்தில் நடைபெற்றது. முதலில் துடுப் பெடுத்தாடிய ஆஸி. அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 186 ஓட்டங்களைச் சேர்த்தது. பதிலுக்கு ஆடிய இந்திய அணி விராட் கோஹ்லி மற்றும் சூர்யகுமார் யாதவ் ஆகியோரின் அதிரடியால் 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றியது.

இதன் மூலம் ஒரு கலண்டர் வருடத்தில் அதிக இருபதுக்கு 20 போட்டிகளில் வெற்றிபெற்ற அணி (21) என்ற உலக சாதனையை இந்தியா படைத்தது. கடந்த போட்டியில் வெற்றிபெற்று அதிக வெற்றி களைப் பதிவுசெய்த பாகிஸ்தானின் உலக சாதனையை இந்தியா சமன் செய்திருந்தது.

இந்நிலையில், தற்போது ரோஹித் சர்மா தலைமையிலான இந்திய அணி அந்த சாதனையை முறியடித்து புதிய உலக சாதனை படைத்துள்ளது. இந்த வருடம் விளையாடியுள்ள 28 போட்டிகளில் இந்திய அணியின் 21ஆவது வெற்றி இதுவாக அமைந்தது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டியில் சாய்ந்தமருது பிரதேச செயலக அணி வெற்றி



(கல்முனை நிருபர்)

சாய்ந்தமருது பிரதேச செயலக அணிக்கும் ஸஹிரியன் 90 அணிக்குமிடையிலான சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டியில் சாய்ந்தமருது பிரதேச செயலக அணி வெற்றிபெற்றது.

அணிக்கு 11 பேர்கொண்ட 10 ஓவர் மட்டுப்படுத்தப்பட்ட போட்டி நேற்று முன்தினம் ஸஹிராக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஸஹிரியன் 90 அணி, 10 ஓவர் நிறைவில் 4 விக்கெட் இழப்பிற்கு 82 ஓட்டங்களைப் பெற்றது. எம்.பாரிஸ் 35 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சாய்ந்தமருது பிரதேச செயலக அணி 9.5 ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 84 ஓட்டங்களைப் பெற்று போட்டியில் 6 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது. எம். ஷியாம் 38 ஓட்டங்களையும் யூ.கே.எம். றிம்சான் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

சாய்ந்தமருது பிரதேச செயலக அணித் தலைவராக பிரதம இலிகிதர் ஏ.எம்.ஆதம்பாவா, ஸஹிரியன் 90 அணித் தலைவராக வைத்தியர் சனுஸ் காரியப்பர் ஆகியோரின் தலைமையில் சாய்ந்தமருது பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ஏ.சீ.எம்.பளீல் ஒழுங்கமைப்பில் இப்போட்டி இடம்பெற்றது. போட்டியின் நடுவர்களாக ஏ.ஆர்.எம். இம்தாத், எம். ரஷாத் ஆகியோர் கடமையாற்றினர்.

# அதிவேக அரைச்சதம் விளாசி கிரீன் சாதனை



இந்திய அணியுடன் நேற்று முன்தினம் நிறைவுக்குவந்த மூன்றாவதும் இறுதியுமான இருபதுக்கு 20 சர்வதேச போட்டியில் ஆஸி. அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய கெமரூன் கிரீன் அதிவேக அரைச்சதம் விளாசி சாதனை படைத்தார்.

கெமரூன் கிரீன் 19 பந்துகளில் அரைச்சதம் அடித்து அசத்தினார். இதன் மூலம் அவுஸ்திரேலிய அணிக்காக அதிவேக அரைச் சதம் அடித்த வீரர்களின் பட்டியலில் இவர் 2ஆவது இடத்தைப் பிடித்தார். முதல் இடத்தில் டேவிட் வார்னர் மற்றும் கிளேன் மேக்ஸ்வெல் ஆகிய இருவரும் (18 பந்துகள்) உள்ளனர்.

# டிராவிட்டை முந்திய கோஹ்லி



இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரரான விராட் கோஹ்லி, முன்னாள் வீரர் ராகுல் ட்ராவிட்டை முந்தி புதிய சாதனை படைத்துள்ளார்.

ஹைதராபாத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆஸி. அணிக்கெதிரான போட்டியில் கோஹ்லி 48 பந்துகளில் 63 ஓட்டங்கள் எடுத்தார். அதன் மூலம் இந்திய அணியின் தற்போதைய தலைமை பயிற்சியாளராக உள்ள டிராவிட், சர்வதேச கிரிக்கெட்டில் எடுத்த ஓட்டங்களைக் காட்டிலும் கூடுதலாக 14 ஓட்டங்கள் எடுத்துள்ளார் கோஹ்லி.

இந்திய அணிக்காக அதிக ஓட்டங்கள் எடுத்துள்ள வீரர்கள்;

சச்சின் டெண்டுல்கர் - 34,357 ஓட்டங்கள் - 664 போட்டிகள்

விராட் கோஹ்லி - 24,078 ஓட்டங்கள் - 471 போட்டிகள்

ராகுல் டிராவிட் - 24,064 ஓட்டங்கள் - 404 போட்டிகள்

சௌரவ் கங்குலி - 18,433 ஓட்டங்கள் - 421 போட்டிகள்

எம்.எஸ்.டோனி - 17,092 ஓட்டங்கள் - 535 போட்டிகள்

# அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் கிழக்கு உத்தியோகத்தர்களுக்கு நியமனக் கடிதம் வழங்கிவைப்பு




(அட்டாளைச்சேனை நிருபர்)

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையினால் கிழக்கு மாகாணத்தில் தெரிவுசெய்யப்பட்ட பதவிவழி உத்தியோகத்தர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் 55ஆவது தேசிய தலைவர் இஹ்சான் ஏ. ஹமீட் தலைமையில் கடந்த சனிக்கிழமை (24) தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் உப தலைவர் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.தஸ்தகீருக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புதிய கிளைகள் உருவாக்குதல் மற்றும் கிளைகளின் மீள்பதிவு உட்பட பல பொறுப்புகள் வழங்கி, இதற்கான நியமனக் கடிதத்தை தேசிய தலைவர் இஹ்சான் ஏ ஹமீட் வழங்கினார்.

இதன்போது அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் 54ஆவது முன்னாள் தேசிய தலைவர் சஹிட் எம்.ரிஸ்மிக்கு 54ஆவது தேசிய தலைவரின் நம்பிக்கை பொறுப்பாளர் சபை உறுப்பினர் தற்போதைய தேசிய தலைவரின் ஆலோசகர், உலகளாவிய நிதிய செயற்றிட்டம் (GFATM), இலங்கை ஒருங்கிணைப்பு இயக்கவியல் குழு (CCMSL), சுகாதார அமைச்சின் காசநோய் ஒழிப்பு செயற்றிட்டம் ஆகிய பொறுப்புகளும் வழங்கப்பட்டன.

இதேபோல் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் செயற்றிட்டத் தவிசாளர் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த கே.எல்.சுபையிருக்கு சமூக நல அபிவிருத்தித் திட்டத்திலுள்ள பல பொறுப்புகள் வழங்கப்பட்டன. அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் மற்றொரு உப தலைவர் யூ.எம்.பசீலுக்கு வடக்கு, கிழக்கு மாகாணம் தவிர, ஏனைய மாகாணங்களில் புதிய கிளைகள் அமைப்பு உட்பட பல பொறுப்புகள் வழங்கப்பட்டதுடன், தேசிய விவகாரப் பொறுப்பு பேரவையின் முன்னாள் தேசிய தலைவர் கே.என்.டினுக்கு வழங்கப்பட்டது.

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் முன்னாள் தலைவர்கள், தேசிய பொதுச் செயலாளர், தேசிய பொருளாளர், நிரந்தர அங்கத்தவர்களுக்கும் தேசிய தலைவர் இஹ்சான் ஏ ஹமீடினால் புதிய பல பொறுப்புகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசிய தலைவரினால் 21 மாவட்ட பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டு இங்கு அறிவிக்கப்பட்டதுடன், பேரவையின் அம்பாறை மாவட்ட பணிப்பாளராக மீண்டும் அட்டாளைச்சேனைச் சேர்ந்த எம்.ஐ.எம்.றியாஸ் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இந்நிகழ்வில் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் போசகர் றஸ்லான் மௌலானா உட்பட பேரவையின் முன்னாள் தேசிய தலைவர்கள், பேரவையின் தேசிய பொதுச் செயலாளர் பராஸ் பாறூக், தேசிய பொருளாளர் எம்.என்.மிப்ராஸ், செயற்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

# ஓட்டமாவடி வீடொன்றில் நகைகளும் பணமும் திருட்டு

(மீராவோடை நிருபர்)

வீடொன்றில் பட்டப்பகலில் நகைகளும் பணமும் திருடப்பட்டுள்ள சம்பவமொன்று நேற்று இடம்பெற்றுள்ளது. வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி எம்.கே. வீதியிலுள்ள வீடொன்றிலேயே இந்த திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வீட்டு உரிமையாளர்கள் வெளியில் சென்றதை அவதானித்த திருடன், பட்டப்பகல் நேரத்தில் ஜன்னல் வழியாக வீட்டினுள் நுழைந்து அலுமாரியிலிருந்த 10 பவுண் நகைகளையும் ஐம்பதாயிரம் பணத்தையும் திருடிச் சென்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், திருட்டுச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# பாலமுனை ஹிறா நகர் மீள்குடியேற்றக் கிராமத்தில் காட்டு யானைகளால் தொல்லை



(பாலமுனை நிருபர்)

பாலமுனை ஹிறா நகர் மீள்குடியேற்றக் கிராமத்தில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நள்ளிரவுவேளைகளில் கிராமத்துக்குள் புகும் யானைகள் வீட்டுத் தோட்டத்திலுள்ள தென்னை, மா, பலா, வாழை மற்றும் வீட்டுத்தோட்டப் பயிர்களை துவம்சம் செய்து வீட்டு சுற்றுப்புறச் சூழலிலுள்ள பயன்தரும் மரங்கள், பயிர்கள் என்பவற்றையும் சேதப்படுத்திச் செல்கின்றன.

பாலமுனை ஹிறா நகருக்கு அண்மையில் காணப்படும் மலைப் பிரதேச காட்டுப்பகுதி மற்றும் ஒலுவில் திண்மக்கழிவு சேகரிப்பு நிலையம் போன்ற இடங்களுக்கு நாளாந்தம் உணவு உண்பதற்காக வரும் காட்டு யானைகளே இவ்வாறு மக்கள் குடியிருப்புப் பிரதேசங்களுக்குள் இரவுநேரங்களில் புகுந்து தொல்லைப்படுத்தி வருகின்றன.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் காட்டு யானைகளின் தொல்லையிலிருந்து பொதுமக்களின் உயிர், உடைமைகள் மற்றும் வீட்டுத்தோட்ட வாழ்வாதாரப் பயிர்கள் என்பவற்றை பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றனர்.

# போடியார் புலம்பல்!



**சாராயத்தவறணைகளை இரவு பத்துமணிவரை திறக்குமாறும், கஞ்சா செய்கைக்கு அனுமதி கொடுக்குமாறும், இரவு களியாட்ட விடுதிகளை ஊக்குவிக்குமாறும், பாலியல் தொழில சட்டபூர்வமாக்குமாறும் இராஜாங்க அமைச்சர் டயனா கமகே எண்ட பொம்புள சொல்லிறாவு எலுவா?**

**எனக்கெண்டா இந்த மனிசி முந்தி பாலியல் முகாம்கள வைச்சு நடத்தி அனுபவமும் வருமானமும் பெற்ற தோறயோ..! ஆரும் அறிஞ்சா ஒள்ளுப்பம் சொல்லுங்க.!**

# சமூகப் பரப்பில் பாரிய வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ள சாய்ந்தமருதின் முதுசம் டாக்டர் ஜெமீலின் மறைவு

## சாய்ந்தமருது ஷூரா சபை அனுதாபம் -

(சாய்ந்தமருது நிருபர்)

கடந்த அரை நூற்றாண்டுக்காலமாக சாய்ந்தமருது பிரதேசத்தின் கல்வி, கலாசார, சமூக முன்னேற்றப் பணிகளில் மிகவும் ஆர்வத்துடன் பங்களிப்பு செய்துவந்த சாய்ந்தமருதின் முதுசொம் டாக்டர் எம்.ஐ.எம்.ஜெமீலின் மறைவானது சமூகப் பரப்பில் எவராலும் ஈடுசெய்ய முடியாத பாரிய வெற்றிடத்தை ஏற்படுத்தியிருக்கிறது - என்று சாய்ந்தமருது ஷூரா சபை வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளது.

சாய்ந்தமருது ஷூரா சபையின் சார்பில் அதன் உப தலைவர் எம்.ஐ.எம்.ஜப்பார், செயலாளர் கலீல் எஸ்.முஹம்மட் ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ள அந்த அனுதாபச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது;

சாய்ந்தமருதின் சிரேஷ்ட வைத்தியரான எம்.ஐ.எம்.ஜெமீல், இப்பிரதேசத்திற்கு மட்டும் சொந்தமான ஒருவராகப் பார்க்கப்படவில்லை. பொதுவாக கிழக்கு மாகாணத்திற்கும் முழு நாட்டுக்கும் தேவையான ஒரு பொக்கிஷமாகவே அவர் கருதப்படுகிறார். அவரது சமூக, இன நல்லுறவுப் பணிகள் அந்தளவுக்கு பறந்து விரிந்து காணப்பட்டிருந்தன.

இவற்றுக்கப்பால் தான் பிறந்த மண்ணை அவர் மிகவும் நேசித்தார். ஊரின் சமூக, கலாசார, பண்பாடுகளை பேணிப் பாதுகாப்பதிலும் அவற்றின் முன்னேற்றத்திலும் அவர் அதீத கரிசனை கொண்டிருந்தார். தனது பிரதேச மக்களின் வாழ்வொழுங்கு சீர்செய்யப்பட வேண்டுமென்பதில் பெரும் ஆதங்கம் கொண்டிருந்தார். இப்பிரதேசத்தின் கல்வி, கலாசார, பொருளாதார முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகளில் முக்கிய பங்கு வகித்திருந்தார். பிரதேசத்தின் பௌதீக வள மேம்பாட்டிலும் தேவைகள் மற்றும் குறைபாடுகளை இனங்கண்டு நிவர்த்திசெய்வதிலும் அவர் கூடிய கவனம் செலுத்தி வந்தார்.

தனது உழைப்பால் கட்டி வளர்க்கப்பட்ட வைத்திய சாலையை ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்தி விட வேண்டுமென்ற வேட்கையுடன் அவர் முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். சாய்ந்தமருது பிரதேசத்திற்கான தனியான நகர சபையை உரிய அணுகுமுறையுடன் வெற்றிகொள்ள வேண்டும் என்ற ஆதங்கம் அவரிடம் காணப்பட்டது. நகர சபைக் கோஷத்தைக் காரணங்காட்டி ஏனைய அபிவிருத்திகளை புறமொதுக்கி, ஊரை இன்னும்



பின்தங்கிய நிலைக்கு இட்டுச்செல்லக்கூடாது என்பதிலும் உறுதியாக இருந்தார்.

இவ்வாறான பின்னணியுடன் ஊர் சம்பந்தப்பட்ட அனைத்து விடயங்களையும் சகல தரப்பினரையும் ஒன்றிணைத்து, ஒரே குடையின் கீழ் முன்கொண்டு செல்ல வேண்டுமென்ற தூரநோக்கு சிந்தனையுடன் சாய்ந்தமருது மறுமலர்ச்சி மன்றத்தின் ஏற்பாட்டில் 2015ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சாய்ந்தமருது ஷூரா சபையின் தலைமைத்துவத்தை ஏற்குமாறு எம்மால் விடுக்கப்பட்ட அழைப்பை அவர் தைரியத்துடன் ஏற்றுக்கொண்டு, இந்த அமைப்பை சிறப்பாக வழிநடத்தியிருந்தார்.

சிவில் அமைப்புகளும் சமூக சேவைகளும் அவரோடு பின்னிப்பிணைந்த விடயங்களாக இருந்தமையினால் மிக முக்கியமான காலகட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்ட ஷூரா சபையை பொறுப்பேற்பதையோ அதன் ஊடாக ஊர் நலன்சார் விடயங்களுக்காக முன்னிற்பதையோ பெரும் சவாலான விடயமாக அவர் கருதவில்லை. இந்த அமைப்பு உத்வேகத்துடன் செயற்பட்ட மிகக் குறுகிய காலத்தினுள் பல விடயங்களை சாதிப்பதற்கு டொக்டர் ஜெமீல் ஆணிவேராக தொழிற்பட்டிருந்தார்.

இன்று கம்பீரமாக சேவையாற்றிக்கொண்டிருக்கின்ற சாய்ந்தமருது வைத்தியசாலை சில வருடங்களுக்கு முன்னர் மந்த கதியில் இயங்கியது. இதனைக் காரணங்காட்டி, இது மூடுவிழாக் காணவிருப்பதாகத் தெரிவித்து, இன்னொரு வைத்தியசாலையுடன் இதனை இணைத்து, இல்லாமல் செய்வதற்கு சுகாதார அமைச்சு மட்டத்தில் திரைமறைவில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தபோது, ஷூரா சபை உரிய தருணத்தில் தலையிட்டு, அதனை முறியடிக்கும் செயற்பாட்டில் தீவிரமாக இயங்கி வெற்றி கண்டதன் பிரதிபலனாகவே இவ்வைத்தியசாலை பாதுகாக்கப்பட்டது.

இவ்வாறே கல்முனை ஸாஹிராக் கல்லூரியின் அதிபர் நியமனத்தில் முரண்பாடுகள் தோன்றி, கல்லூரியில் குழப்பகரமான சூழ்நிலை ஏற்பட்டு, கல்வி நடவடிக்கைகள் சீர்குலையும் அபாயம் ஏற்பட்டபோது, இவ்விடயத்தில் ஷூரா சபை தலையிட்டு, நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொடுத்திருந்தது. இவ்வாறு இன்னும் பல முக்கிய விடயங்களை எமது ஷூரா சபை முன்னின்று கையாள்வதற்கு டாக்டர் ஜெமீலின் தலைமைத்துவம் பெரும் சக்தியாக அமைந்திருந்தது.

சுனாமி அனர்த்தம் இடம்பெற்ற மிகவும் இக்கட்டான காலகட்டத்தில் 2005ஆம் ஆண்டு முற்பகுதியில் சாய்ந்தமருது பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்று சுனாமியினால் உயிர், உடமை, வீடு, வாசல்களை இழந்த மக்களுக்காக நிவாரண உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதிலும் வீடுகளை அமைத்துக் கொடுப்பதிலும் அவர் பெரும் பங்காற்றியிருந்தார்.

அத்துடன், பெரிய பள்ளிவாசல் கட்டிட நிர்மாணத்தை பூர்த்திசெய்தமையும் இப்பிரதேசத்தின் வரலாறுகளை தொகுத்து, ஆவணப்படுத்தி, நூலாக வெளியிட்டமையும் ஏழை மக்களுக்கு உதவுவதற்காக பைத்துஸ் ஸக்காத் எனும் நிதியத்தை ஸ்தாபித்து, அதனை வெற்றிகரமாக முன்கொண்டு சென்றமையும் அன்னாரது மிகப்பெறுமதியான வரலாற்றுச் சேவைகளாக நோக்கப்படுகிறது.

தனது நீண்டகால மருத்துவ சேவை, பிரதேச நலன்சார் பணிகள், பிராந்திய முன்னேற்றத்திற்கான பங்களிப்பு என்பவற்றுக்கு மேலாக பல்வேறு சிவில் அமைப்புகள் ஊடாக சமூக ஒற்றுமை, இன நல்லுறவு, சகவாழ்வு, சமாதான செயற்பாடுகளிலும் பிற மதப் பெரியார்களுடன் கைகோர்த்து முக்கிய பங்காற்றியிருந்தமை என்றும் போற்றத்தக்க பணியாக அமைந்திருக்கிறது.

வைத்திய சேவையாயினும் பள்ளிவாசல் நிர்வாகமாயினும் சிவில் சமூக செயற்பாடாயினும் இன, மதம்சார் கலாசார செயற்பாடுகளாயினும் அனைத்து விடயங்களையும் உரிய இலக்குகளை வெற்றிகொள்ளும் வகையில் நேர்மையுடன் திட்டமிட்டு நேர்த்தியாக நடைமுறைப்படுத்துவதில் டாக்டர் ஜெமீல் ஓர் உதாரண புருஷராகத் திகழ்ந்தார் - என்று சாய்ந்தமருது ஷூரா சபை மேலும் குறிப்பிட்டுள்ளது.

# டெங்கு நுளம்பை கட்டுப்படுத்துவோம்!



**இலங்கையில் தற்போது டெங்கு தாக்கம் அதிகரித்துள்ள நிலையில், பொதுமக்களுக்கு விழிப்பூட்டும் வகையில் தொற்றுநோய் வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ.சி.எம்.பசால் 'தமிழன்' நாளிதழுக்கு வழங்கிய நேர்காணல்.**

**டெங்குநோய் பற்றி சிறுவிளக்கம் தாருங்கள் ?**

டெங்கு நோய் என்பது ஆபோ இன வைரஸ் மூலம் பரவுகின்ற ஒரு நோய் என்பதுடன், நோய்த்தொற்றுள்ள ஒரு நுளம்புக் காவியாக செயற்படுகிறது. இவ்வாறான நுளம்புகள் துப்புரவு செய்யப்படாத காணி நிலங்களில் காணப்படும் குப்பைகள், கைவிடப்பட்ட கிணறுகள், வீடுகளில் காணப்படும் கழிவறைகள், கைவிடப்பட்ட வீடுகள், அவற்றில் காணப்படும் கழிவறைகள், மொட்டைமாடிகளில் போடப்படும் தேவையற்ற பொருட்கள் மற்றும் சரியாக பராமரிக்கப்படாத நீர்த்தாங்கிகள் போன்றவற்றில் தேங்கிக் காணப்படும் நன்னீரிலே ஈடிஸ் இன நுளம்புகள் முட்டையிட்டு அவை புழுக்களாக வளர்ந்து நுளம்புகளாக உருமாறுகின்றன. இவற்றினால் டெங்குநோய் மனிதர்களுக்கு பரவுகிறது

**டெங்கின் தாக்கம் நாட்டில் தற்போது எவ்வாறு உள்ளது. அதனைக் கட்டுப்படுத்த சுகாதாரத்துறை எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்கிறது ?**

இலங்கையில் டெங்கு நோயின் தாக்கம் தற்பொழுது சராசரியாக வாரமொன்றிற்கு ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. பொதுவாக சிறந்த கட்டுப்பாட்டு நிலைமையின்போது நாடளாவிய ரீதியில் வாரமொன்றிற்கு 500 பேரை விட குறைவான டெங்கு நோயாளர்களே காணப்பட வேண்டும். ஆனால், தற்பொழுது 1200 நோயாளர்களாக கூடியுள்ளது. நாம் பெருந்தொற்று (out braek) ஏற்படாதவாறு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டி இருக்கின்றது. அது மட்டுமல்லாது அதிக தொற்று காணப்படும்போது இறப்பு வீதமும் அதிகரிக்கலாம். எனவே, நாங்கள் இந்த வருடத்தில் இரண்டு Dengue Control Activities யை செய்யவிருக்கின்றோம். அதில் முதலாவது Phace, Septemper 28 – 30 வரை நடைபெற இருக்கின்றது. அடுத்த Phace, November 3 – 5இல் நடைபெற இருக்கிறது.

இதுவரை எமது நாட்டில் 53,98 5பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்கின்ற தகவலையும் பகிர்ந்துகொள்கின்றேன். டெங்கு நோயைக் கட்டுப்படுத்த வேண்டுமெனில், நோய்க் காவியான நுளம்பையும் அவற்றின் குடம்பியையுமே கட்டுப்படுத்த வேண்டும். எனவே, சுகாதார திணைக்களத்தின் Entomological Team ஆனது நோய்க் காவியான நுளம்பும் அவற்றின் குடம்பியும் எங்கு வளருகின்றன என்பதனை ஆராய்ந்தறிந்து அவற்றிற்கான Reportsயை அந்த பகுதியின் MOH Officeகளுக்கு கொடுக்கின்றனர். இதனைத்தொடர்ந்து அவர்கள் அதற்கான தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்வர். மேலும் அரசாங்கத்தினால் இதற்காக பல்வேறு திட்டங்கள் உருவாக்கப்பட்டு இருக்கின்றன. அதிலே பொதுவாக foging அதாவது மருந்துகளை விசுறுகின்ற செயற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது. இதன்மூலம் பறக்கின்ற நுளம்புகளை கட்டுப்படுத்த முடியும். அதுபோன்று நீண்ட நாட்கள் பாவிக்கப்படாத கிணறுகளில் உருவாகிய குடம்பிகளை அழிக்க "அபேட்" போன்ற இரசாயனங்கள் விடப்படுகின்றன. இதன்மூலம் குடம்பிகள் உருவாகாமல் தடுக்கப்படுவதோடு அழிக்கப்படுகின்றது. அது தவிர, சுகாதாரப் பரிசோதகர்களும் டெங்குக்குரிய செயற்பாட்டாளர்களும் வீடுவீடாகச் சென்று துப்புரவு வேலைகளை மக்களுக்கு அறிவுறுத்தி வருகின்றனர். இவ்வாறு சுகாதாரத்துறையினரால் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**டெங்கைக் கட்டுப்படுத்த பொதுமக்களின் பங்களிப்பு எவ்வாறு இருக்கவேண்டும்?**

பொதுமக்களின் பங்களிப்பு பின்வருமாறு அமைவது சிறந்ததாக இருக்கும். தங்களின் அருகில் காணப்படுகின்ற வெறும் வளவுகள், கைவிடப்பட்ட கிணறுகள் எனவற்றை துப்புரவு செய்தல். ஏனெனில், அங்கு போடப்படும் குவளைகள் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்களில் நீர் தேங்கி நுளம்புகள் அதிகமாகப் பெருகும். வீடுகளில் காணப்படும் கழிவறைகள், பாவிக்கப்படாத கழிவறைகள் மேலும் கைவிடப்பட்ட வீடுகள் மற்றும் அவற்றில் காணப்படும் கழிவறைகள் போன்றவற்றை துப்புரவு செய்தல்.

மொட்டைமாடிகளில் போடப்படும் தேவையற்ற பொருட்களை அகற்றுதல். வீடுகளில் காணப்படும் நீர்த்தாங்கிகளை சரியான முறையில் மூடுதல் மற்றும் பூச்சாடிகளில் தேங்கிய நீரை சரியான முறையில் அகற்றுதல் போன்ற விடயங்களை பொதுமக்கள் மேற்கொள்ள வேண்டும். டெங்கு அபாய பிரதேசங்களுக்கு செல்பவர்கள் மற்றும் சென்று வருபவர்கள் மிகவும் அவதானமாக செயற்படவேண்டும்.

ஏனெனில், டெங்கு காவிகளான ஈடிஸ் ஈஜிப்டா, ஈடிஸ் அல்போபிக்டஸ் எனும் நுளம்புகள் இலங்கை முழுக்க பரவிக் காணப்படுகின்றன. எனவே, அபாய பிரதேசங்களுக்கு சென்று வருபவர்கள் ஏனையவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தலாம். எமது நாட்டில் டெங்கு நுளம்பானது இயலவே தன்னிடம் வைரஸை கொண்டுதான் காணப்படுகிறது.


**இலங்கையில் டெங்கு அபாய மாவட்டங்களாக கருதக்கூடிய மாவட்டங்களை குறிப்பிடுக?**

இலங்கையில் மேல்மாகாணம் மிகப் பிரதான அபாய மாவட்டமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. அதிலும் கொழும்பு மாவட்டம், கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசம் மற்றும் கொழும்பு மாவட்டத்தின் எஞ்சிய பிரதேசம் என்பனவும், கம்பஹா மாவட்டம், களுத்துறை மாவட்டம் இது தவிர, கண்டி மாவட்டம், கேகாலை மாவட்டம், காலி மாவட்டம், இரத்தினபுரி மாவட்டம் போன்றன பிரதான டெங்கு அபாய மாவட்டங்களாக அடையாளம் காட்டப்பட்டுள்ள.

**இலங்கையை டெங்கு அற்ற நாடாக உருவாக்குவதற்கு பங்களிப்பு செய்யவேண்டியர்கள் யார் எனக் கருதுகின்றீர்கள்?**

டெங்கு அற்ற நாட்டினை உருவாக்க சுகாதாரத்துறையினரால் மட்டும் முடியாது சுகாதாரத்துறையின் அதிக பங்களிப்புடன் அனைத்துத் தரப்பினரும் பங்களிப்பு செய்யவேண்டும். அதிலும் விசேடமாக பொதுமக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமானது அவர்களின் பங்களிப்பு இல்லாவிட்டால் அதனை அடைந்துகொள்வது கடினமானது.

அந்தவகையில் நாட்டிலுள்ள உள்ளூராட்சி சபையினரும் ஒவ்வொரு தனிநபரும் ஒவ்வொரு குடும்பத்தினரும் மற்றும் அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் என சகலரும் இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முயற்சிக்க வேண்டும். அனைவரும் ஒரு செயற்பாட்டுத் திட்டத்தின் கீழ் செயற்படுவதன் மூலம் தான் டெங்குகற்ற நாட்டினை உருவாக்க முடியும்.



**நேர்காணல் - இஸட் ஏ. றஹ்மான் (ஒலுவில் நிருபர்)**

# இத்தாலியின் முதல் பெண் பிரதமராகிறார் ஜியோர்ஜியா



இத்தாலி பொதுத் தேர்தலில் தீவிர வலதுசாரி தலைவரான ஜியோர்ஜியா மெலோனியின் (Giorgia Meloni) கூட்டணி பெரும்பாலான இடங்களைக் கைப்பற்றியுள்ள நிலையில், அந்நாட்டின் முதல் பெண் பிரதமாக 45 வயதாகும் மெலோனி பதவியேற்கவுள்ளார்.

இத்தாலியில் கூட்டணி கட்சிகளின் ஆதரவோடு கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் பிரதமராக நியமிக்கப்பட்ட மரியோ டிராகி கடும் பொருளாதார நெருக்கடி எதிரொலியாக கடந்த ஜூலை மாதம் பதவி விலகினார்.

இதனைத் தொடர்ந்து இத்தாலியில் பொதுத் தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்டு 600 உறுப்பினர்களைக் கொண்ட இத்தாலி நாடாளுமன்றத்தின் இரு அவைகளுக்கும் நேற்றுமுன்தினம் தேர்தல் நடைபெற்றது.

நாடு முழுவதுமாக அமைக்கப்பட்டிருந்த 60 ஆயிரம் வாக்குச்சாவடிகளில் மக்கள் ஆர்வத்துடன் வாக்களித்த நிலையில், உடனடியாக வாக்குகள் எண்ணப்பட்டன. முடிவுகள் உடனுக்குடன் அறிவிக்கப்பட்ட நிலையில், பிரதர்ஸ் ஒவ் இத்தாலி கட்சித் தலைவர் ஜியோர்ஜியா மெலோனியின் வலதுசாரி கூட்டணி பெரும்பாலான இடங்களில் முன்னிலை பெற்றிருக்கிறது.

இத்தாலி நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபை மற்றும் சேனன் சபைக்கு தேர்தலில் மெலோனியின் பிரதர்ஸ் ஒவ் இந்தியா கட்சி சுமார் 27 வீத வாக்குகளைப் பெற்றிருக்கிறது. அவரது வலதுசாரி கூட்டணி மொத்தம் 44 வீத ஆதரவைப் பெற்றது. 2ஆவது இடத்தை என்ட்ரிகோ லிட்டா தலைமையிலான இடதுசாரி கட்சி கூட்டணி பிடித்துள்ளது. பெரும்பான்மை இடத்தைப் பிடித்திருப்பதை அடுத்து ஜியோர்ஜியா மெலோனி இத்தாலியின் முதல் பிரதமராக தெரிவாகியுள்ளார்.

# இனிப்புக்கு செம சிரிப்பு; கசப்புக்கு முகச் சுளிப்பு!

## ஸ்மார்ட்டான கருக்குழந்தைகள்





கருவில் இருக்கும்போதே குழந்தைகள் சங்கீதத்தை ரசிக்கின்றன. தாயின் இன்ப, துன்பத்தையும் தனது அசைவுகள் மூலம் பிரதிபலிக்கின்றன. இதனால், கருவில் இருக்கும்போதே குழந்தைகளுக்கு இப்போதுள்ள பெண்கள், பாடம் எடுக்கத் தொடங்கிவிட்டனர்.

இந்நிலையில், கருவில் வளரும்போதே இனிப்பு, கசப்புகளை குழந்தைகள் ருசித்து, அதற்கேற்ற முகபாவனைகளை காட்டுகின்றன என்பதை பிரிட்டன் விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். கருவுற்ற 100 பெண்களை தெரிவுசெய்த விஞ்ஞானிகள், அவர்களை 2 பிரிவாக பிரித்தனர். அவர்களில் ஒரு பிரிவினருக்கு கெரட் சுவை அடங்கிய கேப்சூல் மாத்திரையையும், மற்றவர்களுக்கு பரட்டைக்கீரையின் சுவை அடங்கிய கேப்சூல் மாத்திரையையும் வழங்கினர்.

இதை சாப்பிட்ட 20 நிமிடங்களுக்குப் பின்னர் இப்பெண்கள் அல்ட்ராசவுண்ட் ஸ்கேனிங் செய்யப்பட்டனர். இதில், பரட்டைக்கீரை கேப்சூல் விழுங்கிய பெண்களின் வயிற்றில் வளரும் குழந்தைகள், கசப்பு தாங்காமல் முகத்தை சுளித்துக்கொண்டிருப்பது பதிவானது. அதேநேரம். கெரட் கேப்சூல் விழுங்கிய பெண்களின் வயிற்றிலிருந்த குழந்தைகள், இனிப்பின் சுவையால் சிரித்த முகத்துடன் இருந்தன. இதன்மூலம், கருவில் வளரும்போதே, இனிப்பு, கசப்பின் தன்மையை குழந்தைகள் அறிந்து ருசிக்கின்றன என்பது உறுதியாகியுள்ளது.

# மகாராணி எலிசபெத்துக்கு கருங்கற்களால் கல்லறை



மறைந்த பிரித்தானிய மகாராணி இரண்டாம் எலிசபெத்தின் கல்லறை புகைப்படத்தை பெக்கிங்ஹாம் அரண்மனை வெளியிட்டுள்ளது. ராணியின் கல்லறை பெல்ஜிய கருங்கற்களால் கட்டப்பட்டதெனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரித்தானிய மகாராணி இரண்டாம் எலிசபெத், ஸ்கொட்லாந்திலுள்ள பல்மோரல் அரண்மனையில் வசித்துவந்த நிலையில், உடல்நலக் குறைவு ஏற்பட்டு கடந்த 8ஆம் திகதி தனது 96ஆவது வயதில் காலமானார். பிரித்தானிய ராணியாக 70 ஆண்டுகளாக ஆட்சிபுரிந்து சரித்திரம் படைத்தவரின் மறைவுக்குப் பின்னர் ராணியின் மூத்த மகனான 3ஆம் சார்ள்ஸ் மன்னராக பொறுப்பேற்றுள்ளார். ராணி எலிசபெத்தின் இறுதிச்சடங்குகள் கடந்த 19ஆம் திகதி இடம்பெற்றன.

இந்நிலையில், ராணியின் உடல் புதைக்கப்பட்ட கல்லறையின் புகைப்படத்தை பெக்கிங்ஹாம் அரண்மனை வெளியிட்டுள்ளது. ராணியின் கல்லறை ராணியின் தந்தை மன்னர் 4ஆம் ஜோர்ஜ் நினைவுப் பேராலயத்தில் அமைந்துள்ளது. கல்லறை முழுவதும் பளபளப்பான பெல்ஜிய கற்களால் கட்டப்பட்டுள்ளது. மேலும், கல்லறையின் கல்லில் பிரித்தானிய ராணியின் பெயர், அவரது கணவர் பிலிப் மற்றும் ராணியின் பெற்றோரின் பெயர்களும் எழுதப்பட்டுள்ளன. ராணியின் தந்தையான 6ஆம் மன்னர் ஜோர்ஜின் கல்லறையும் இதே இடத்தில்தான் உள்ளது.

# ரஷ்ய பாடசாலையில் துப்பாக்கிச்சூடு: 13 மாணவர்கள் பலி; 20 பேர் படுகாயம்



ரஷ்யாவில் பாடசாலையொன்றுக்குள் புகுந்த மர்ம நபர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் 13 மாணவர்கள் உயிரிழந்துள்ளதுடன், 20 பேர் படுகாயமடைந்தனர். துப்பாக்கிச்சூடு நடத்திய மர்ம நபர் தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்துகொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ரஷ்யாவின் கிழக்கு மொஸ்கோவிற்கு அருகிலுள்ள உத்முர்டியா மாகாணத்தில் செயற்பட்டுவரும் பாடசாலையில் நேற்று திடீரென துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

மர்ம நபர் நடத்திய இந்த துப்பாக்கிச்சூட்டில் 13 மாணவர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும், 14 மாணவர்கள் உட்பட 21 பேர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக பேசிய உத்முர்டியா மாகாண ஆளுநர் அலெக்சாண்டர் பிரிசாலோவ், துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட பாடசாலையைச் சேர்ந்த மாணவர்கள் வேறு பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். விசாரணைக்குழு அளித்த தகவலின்படி, துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட வீடியோவில் மர்ம நபர் கறுப்பு நிற உடையுடன் நாஜி அமைப்பைச் சேர்ந்த வில் அவரின் உடையில் இருந்ததாக விசாரணைக்குழு தெரிவித்துள்ளது. இதனடிப்படையில் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது எனக் குறிப்பிட்டார்.

உலக செய்திகள்

# ரஷ்ய இராணுவ துணை அமைச்சரை அதிரடியாக நீக்கிய ஜனாதிபதி புட்டின்



உக்ரைன் போரில் ரஷ்யாவிற்கு ஏற்பட்டுள்ள பின்னடைவின் காரணமாக பாதுகாப்பு துணை அமைச்சர் பதவியிருந்து டிமிட்ரி புல்ககோவ் நீக்கப்பட்டுள்ளார்.

அவருக்குப் பதிலாக மிகைல் மிஜின்ட்சேவ் நியமிக்கப்பட்டுள்ளார். புல்ககோவ் 2008ஆம் ஆண்டுமுதல் ரஷ்ய இராணுவத்தின் தளவாடங்களை நிர்வகித்து வந்தவர். புதிதாக பொறுப்பேற்ற மிகைல் மிஜின்ட்சேவ் உக்ரைனிலுள்ள மரியப்போல் நகரத்தின் மீது மிகக் கொடூரமான தாக்குதல்களை நடத்த உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

**ரஷ்யா பேரழிவை சந்திக்கும் - அமெரிக்கா கடும் எச்சரிக்கை**

இந்நிலையில், உக்ரைனுடனான போரில் ரஷ்யா அணு ஆயுதங்களைப் பயன்படுத்தினால் பேரழிவு நிச்சயம் என அமெரிக்கா எச்சரித்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகர் தெரிவிக்கையில், உக்ரைன் மீதான போரில் ரஷ்யா அணு ஆயுதங்களைப் பயன்படுத்தினால் ரஷ்யா பேரழிவை சந்திக்க நேரிடும். அமெரிக்கா ரஷ்யாவிற்கு சரியான பதிலடி கொடுக்கும் - என்றார்.

## ஈரானில் தீவிரமடையும் ஹிஜாப் எதிர்ப்புப் போராட்டம்

# உயிரிழந்த சகோதரனின் நினைவிடத்தில் தனது கூந்தலை வெட்டி எறிந்து அரசை எதிர்த்த சகோதரி



ஈரானில் ஹிஜாப் எதிர்ப்புப் போராட்டத்தில் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்ட தனது சகோதரனின் உடலின் மீது தனது கூந்தலை வெட்டி எறிந்து அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளார் இளம் பெண் ஒருவர்.

ஜாவத் ஹேதரி என்ற அந்த இளம் பெண்ணின் சகோதரர் ஹிஜாப் எதிர்ப்புப் போராட்டத்தில் கொல்லப்பட்டார். இந்நிலையில், அவரது நினைவிடத்தில் ஜாவேத் ஹேதரி மற்றும் சில பெண்கள் திரண்டனர். அப்போது பெண்கள் அனைவரும் நினைவிடத்தில் ரோஜாப் பூக்களை வீசி அழுது தமது துக்கத்தை வெளிப்படுத்தினர்.

ஜாவேத் மட்டும் ஒரு கத்திரிக்கோலை எடுத்து தனது கூந்தலை கத்திரித்து சகோதரன் நினைவிடத்தின் மீது வீசினார். இந்த வீடியோ சமூக வலைத்தளங்களில் தற்போது வைரலாகியுள்ளது.

இது குறித்து ஈரான் ஊடகவியலாளரும் சமூக செயற்பாட்டாளருமான மாஷி அலினேஜத் தெரிவிக்கையில், கூந்தலை வெட்டி எறிவதால் ஈரான் பெண்கள் தங்களின் சோகத்தையும், கோபத்தையும் அரசுக்கு தெரிவிக்கின்றனர் என்றார்.

ஈரானில் ஹிஜாபுக்கு எதிராக அந்த நாட்டு மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். நாடு முழுவதும் போராட்டம் தீவிரமடைந்து போர்க்களமாக மாறியுள்ளது. பொலிஸ் துப்பாக்கிச்சூடு, தடியடியில் இதுவரை 50 பேர் உயிரிழந்துள்ளனர். ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஈரானில் 9 வயது சிறுமிமுதல் முதிர்வயது பெண்கள்வரை ஹிஜாப் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பெண்கள் ஆடை அணியும் விதத்தை கண்காணிக்க காஸ்த் எர்ஷாத் என்ற சிறப்புப் பிரிவு பொலிஸார் பொது இடங்களில் ரோந்து சுற்றி வருகின்றனர்.

ஈரானின் குர்திஸ்தான் மாகாணம், சஹிஸ் நகரைச் சேர்ந்த மஹ்ஷா அமினி (வயது 22) என்பவர் கடந்த 13ஆம் திகதி தலைநகர் தெஹ்ரானிலுள்ள உறவினரை சந்திக்க குடும்பத்துடன் சென்றார்.

அப்போது சிறப்புப் படை பொலிஸார், அமினியை வழிமறித்து அவர் முறையாக ஹிஜாப் அணியவில்லை என்று குற்றஞ்சாட்டினர். அவரை கைதுசெய்து வேனில் அழைத்துச் சென்றனர். பொலிஸ் காவலில் அவர் மிகக் கொடூரமாக தாக்கப்பட்டார். இதில் தலையில் பலத்த காயமடைந்த அவர், கோமா நிலைக்கு சென்ற நிலையில் கடந்த 16ஆம் திகதி வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

இந்நிலையில்தான் அங்கு இலட்சக்கணக்கான பெண்கள் துணிச்சல்மிகு போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

ஈரான் தலைநகர் உட்பட நாட்டின் 80 நகரங்கள் போராட்டங்களால் பற்றி எரிகின்றன. மேலும் வெளிநாடுகளிலும் ஈரான் அரசுக்கு எதிரான போராட்டங்கள் தீவிரமடைந்து வருகின்றன.

ஐரோப்பிய நாடுகளில் செயற்படும் ஈரான் தூதரகங்களுக்கு முன்பாக பெண்கள் நூதன போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். மக்களுக்கு எதிராக இராணுவத்தைப் பயன்படுத்தக்கூடாது என்று ஈரான் அரசுக்கு ஐ.நா. சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

திருமண தேடல் விளம்பரங்களை
இலவசமாக பிரசுரித்துக்கொள்ள
அரிய வாய்ப்பு!

“ உங்களுடைய
அன்பான மகன் / மகளின்
திருமணத்துக்கு பொருத்தமான
துணையை தேடுகிறீர்களா?
வட்ஸ்அப் ஊடாக எமக்கு
விபரங்களை அனுப்பி வையுங்கள்! ”




தமிழன் ஞாயிறு வார இதழில் வெளியாகும் விளம்பர பக்கத்தில் உங்களுடைய மகன் / மகளுடைய விபரங்களையும் எப்படியான துணையை தேடுகிறீர்கள் என்ற விடயத்தையும் தெளிவாக குறிப்பிட்டு (30 சொற்களுக்குக் குறைவாக) உங்களுடைய விலாசத்தை குறிப்பிட்டு கீழே உள்ள எமது வட்ஸ்அப் இலக்கத்துக்கு அனுப்பிவையுங்கள். இவற்றுக்கு எதுவித கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது.

மேலதிக தகவல்களுக்கு
தொடர்புகொள்க : சுசி - 0115 886187

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைபேசி இல : 0115 200 900.
தொலைநகல் : 0112 673 442
வட்ஸ்அப் : 076 139 3805
thamilaneditor@gmail.com

விவாஹா